பக்கங்கள் – 16+4 | விலை – ரூபா 50
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40 கதிர் : 161 | 07 மே 2025 புதன்கிழமை | சித்திரை 24 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2056

# நாடு முழுதும் என்.பி.பி.யோடு

# தமிழர் தாயகம் தமிழரசோடு!

யாழ்ப்பாணம், மே 7

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், நாட்டின் பல பகுதிகளிலும் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி (திசைகாட்டி) ஆதிக்கம் செலுத்தும் அதேவேளை, வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் தமிழரசுக் கட்சி அமோகமான வெற்றியைப் பதிவுசெய்துள்ளது. நேற்று நள்ளிரவு வரையான முடிவுகளின் படி, தமிழர் தாயகத்தில் சுமார் 40 சபைகளில் தமிழரசுக் கட்சி பெரும்பான்மையைப் பதிவுசெய்துள்ளது. எனினும் வவுனியா நகரசபையில் மட்டும் தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுள்ளது.

15

## கிளிநொச்சி சபைகளில் தமிழரசு அபார வெற்றி

கிளிநொச்சி, மே 7

கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி பிரமாண்டமான வெற்றியைப் பதிவுசெய்துள்ளது. இதன்படி, பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை, கரைச்சிப்பிரதேசசபை மற்றும் பூநகரிப் பிரதேசசபை

15

## வவுனியா மாநகரசபை தேசிய மக்கள் சக்தியிடம்!

வவுனியா, மே 7

வவுனியா மாநகரசபையில் தேசிய மக்கள் சக்தி அதிகளவான ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. எனினும், கூட்டணி மூலமே ஆட்சியைத் தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. 10 வட்டாரங்களைக் கொண்ட வவுனியா

15



## தமிழரசுக் கட்சிக்கு பெருமிதமான வெற்றி

### சுமந்திரன் நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 7

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு பெருமிதமான வெற்றி கிடைத்துள்ளது. இந்த வெற்றியை வழங்கியமைக்காக தமிழ் மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலர் சுமந்திரன் தெரிவித்துள்

15



## மாகாணசபைத் தேர்தலை மிகவிரைவில் நடத்துவோம்

### பிரதமர் ஹரிணி உறுதி

கொழும்பு, மே 7

உள்ளூராட்சித் தேர்தலைத் தொடர்ந்து, மாகாணசபைத் தேர்தலையும் விரைவில் நடத்துவோம் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வாக்களித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரி

15



## உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு மிக மந்தம்

15





## ஜே.வி.பி.யை நம்புவதற்கு மக்கள் தயாராக இல்லை

### சிவாஜிலிங்கம் வெற்றியுரை

யாழ்ப்பாணம், மே 7

ஜே.வி.பி.யினுடைய பசப்பு வார்த்தைகளை நம்பி ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர்களுக்கு வாக்களித்தமை பெரும் தவறு என்பதை மக்கள் உணர்ந்துள்ள

15

துண்டு திசைதெரியாமல் ஒருக்காத்தான் தவறிவிழும் கண்டியளோ

**உள்ளூராட்சித் தேர்தல் 2025**

நள்ளிரவு வரையான வடக்கு மாகாண **தேர்தல் முடிவுகள்** உள்ளே

## வல்வெட்டித்துறையில் பற்றைக்காட்டுக்குள் சடலமொன்று மீட்பு!

யாழ்ப்பாணம், மே 7

வடமராட்சி வல்வெட்டித்துறைப் பிரதேசத்துக்கு உட்பட்ட, பற்றைக் காட்டுக்குள் இருந்து நேற்றுமுன்தினம் இரவு இளைஞர் ஒருவர் சடலமாக மீட்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 06.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4065 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 15 52 71 76 |
| விசேட எழுத்து | C |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 06.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1132 |
| வெற்றி இலக்கிளம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 42 44 47 50 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 06.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0091 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 7 3 2 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 06.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2171 |
| ஆங்கில எழுத்து | K |
| சுப்பர் இலக்கம் | 22 |
| வெற்றி இலக்கங்கள் | 12 20 42 69 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 06.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5823 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 6 9 5 9 8 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 06.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1853 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 22 46 66 79 |
| விசேட எழுத்து | U |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 06.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0398 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 5 9 8 0 |

# ஒரு வாரத்தில் 862 பேருக்கு டெங்கு

கொழும்பு, மே 7

இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் கடந்த வாரத்தில் மாத்திரம் 862 புதிய நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என சுகாதாரப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்த ஆண்டில் இது வரை மட்டும் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை 18,321 ஆகப் பதிவாகியுள்ளது.

எனினும் இதுவரை டெங்கு தொடர்பாக ஆறு மரணங்கள் மட்டுமே பதிவாகியுள்ளன.

மேல் மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளிகள் பதிவாகிவருகின்றனர்.

டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய முயற்சிகளுக்கு பொதுமக்கள் தீவிரமாக ஆதரவளிக்கவேண்டும் என்றும், தங்கள் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்து நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அகற்றவேண்டும் என்றும் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

# மீட்கப்பட்ட தங்கம் முஸ்லிம்களினதே

## கூறுகிறது ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ்

**கொழும்பு, மே 7**

**விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட நகைகளில் அதிகமானவை வடக்கு முஸ்லிம்களிடமிருந்து புலிகளால் பறிக்கப்பட்டவையாகும். எனவே அந்த நகைகளை அரசு, முஸ்லிம்களுக்கு வழங்கவேண்டும் என ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பாக உலமாக் கட்சித்தலைவரும் ஐக்கிய காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவருமான முபாறக் அப்துல் மஜீத் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1990 ஆம் ஆண்டு வடக்கில் தமிழ் மக்களுடன் இரண்டற கலந்து வாழ்ந்த முஸ்லிம்களை இனரீதியாகப் பிரித்து, விடுதலைப்புலிகள் அந்த மக்களின் அனைத்துச் சொத்துகளையும் ஆயுதமுனையில் பறிமுதல் செய்து வெளியேற்றியது யாவரும் அறிந்ததே.

அதன்பின் மஹிந்த ராஜபக்ச ஆட்சியில் புலிகள் பதுக்கிவைத்திருந்த பெருந்தொகையான நகைகளை அரச படையினர் கைப்பற்றி அதனை அரசாங்கத்திடம் ஒப்படைத்தது பாராட்டத்தக்க செயலாகும்.

இந்தநிலையில் பெருமளவில் இழந்த-முஸ்லிம்களின் நகைகளை அரசு நியாயமான முறையில் ஆய்வுசெய்து முஸ்லிம்களுக்குரிய நகைகளை மதிப்பீடு செய்து அவர்களிடம் வழங்க வேண்டும் என ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 06.05.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0531 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கம் | 6 6 5 3 8 5 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 06.05.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2797 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 12 18 32 49 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 06.05.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 03 28 38 47 |
| வெற்றி வாரம் | 4958 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 06.05.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0677 |
| வெற்றி இலக்கம் | 02 25 29 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 06.05.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ரிஷபம் | |
| வெற்றி இலக்கம் | 19 27 29 39 |
| சீட்டிழுப்பு வாரம் | 4509 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 06.05.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | P |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கம் | 03 10 45 63 |
| வெற்றி வாரம் | 1973 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 06.05.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 36 51 56 66 |
| வெற்றி வாரம் | 2623 |

# வேலைவாய்ப்பில் மோசடி 6 பேர் பணிநீக்கம்

கொழும்பு, மே 7

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொது முகாமையாளர் உட்பட 6 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலைகளுக்காக பயிற்சிபெறாத பெண்களைக் கடத்திச்சென்றமை தொடர்பான 2.5 பில்லியன் ரூபா மோசடிக் குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலைகளுக்குச் சென்று அனுபவம் உள்ளவர்கள் என்று சான்றளிக்கும் போலி ஆவணங்களைத் தயாரித்து இந்த நிதிமோசடி செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஒருவரிடம் இருந்து ஒரு இலட்சம் ரூபாவிலிருந்து ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா வரை பணம் வசூலிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

பயிற்சி இல்லாமல் வீட்டுவேலைக்காக வெளிநாடு சென்றதன் காரணமாக, அந்தப் பெண்கள் வேலையிடத்தில் மிகவும் ஆபத்தான சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்ட சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளன.

பயிற்சி இல்லாமல் வெளிநாடு சென்ற வீட்டுப் பணிப் பெண்கள் வெளிநாடுகளில் பல்வேறு துன்புறுத்தல்களுக்கும், கொடுமைப்படுத்தல்களுக்கும் உள்ளான சந்தர்ப்பங்களும் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

(கூ-கு)



# மாணவி உயிர்மாய்ப்பு; நடவடிக்கை எடுங்கள்

## நாமல் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 7

கொட்டாஞ்சேனையில் உயிர்மாய்த்துக்கொண்ட பாடசாலை மாணவி தொடர்பில் கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரிய விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் தளப் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் 16 வயது பாடசாலை மாணவி ஒருவர், கடந்த கால சம்பவத்தின்போது தனியார் கல்வி வகுப்பில் பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டு துயரகரமாக தனது வாழ்க்கையை முடித்துக்கொண்டார்.

இந்தச் சம்பவம் ஓர் அரச பாடசாலையில் நடந்துள்ளது. ஒரு குழந்தை தனது உயிரை இழக்கும் வரை அதிகாரிகள் காத்திருக்கிறார்கள். கல்வி அமைச்சகம் உட்பட அதிகாரிகள் சரியான நேரத்தில் நடவடிக்கை எடுத்து பொலிஸாருடன் இணைந்து விசாரணைகளை நடத்தியிருந்தால், இதுபோன்ற மாணவர் மரணங்களைத் தடுத்திருக்கலாம்.

இந்தச் சம்பவம் குறித்து கல்வி அமைச்சு விரிவான விசாரணை நடத்தி, பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




# கட்டுநாயக்கவில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் காயம்

கொழும்பு, மே 7

கட்டுநாயக்கப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று காலை 10 மணியளவில் இந்தத் துப்பாக்கிச்சூடு நடந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த நபர் சிகிச்சைக்காக சீதுவ விஜயகுமாரதுங்க மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் - யாழ். மாவட்டம்

## நேற்று நள்ளிரவு வரையான முன்னிலை முடிவுகள்

### யாழ்ப்பாண மாநகரசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 11 +1 |
| தமிழரசுக் கட்சி | 10+3 |
| தேசிய மக்கள் சக்தி | 4+6 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 2+2 |
| ஈ.பி.டி.பி | 0+4 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 0+1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 0+1 |

### நெடுந்தீவு பிரதேசசபை

| கட்சி | ஆசனம் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 04 |
| ஈ.பி.டி.பி | 03 |

### வலி. வடக்குப் பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 11+0 |
| தேசிய மக்கள் சக்தி | 7+2 |
| தமிழ்த் தேசியப் பேரவை | 2+4 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 1+2 |
| ஈ.பி.டி.பி | 0+3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 0+2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 0+1 |

### சாவகச்சேரி பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 06 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 05 |
| தேசிய மக்கள் சக்தி | 04 |
| தமிழ்த் தேசியப் பேரவை | 02 |

### வல்வெட்டித்துறை நகரசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 07 |
| தமிழரசுக் கட்சி | 2+3 |
| தேசிய மக்கள் சக்தி | 0+3 |
| ஈ.பி.டி.பி | 0+1 |

### சாவகச்சேரி நகரசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 4+2 |
| தமிழரசுக் கட்சி | 3+3 |
| தேசிய மக்கள் சக்தி | 2+1 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 02 |
| ஈ.பி.டி.பி | 0+1 |

### வடமராட்சி தென்மேற்குப் பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 13 |
| தமிழ்த் தேசியப் பேரவை | 04 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 01 |

### வேலணைப் பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 8+0 |
| தேசிய மக்கள் சக்தி | 4+0 |
| ஈ.பி.டி.பி | 0+3 |
| தமிழ்த் தேசியப் பேரவை | 0+2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 0+1 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 0+1 |
| சுயேச்சை - 01 | 0+1 |
| சுயேச்சை - 02 | 0+1 |
| சுயேச்சை - 03 | 0+1 |

### நல்லூர்ப் பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 06 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 04 |
| தேசிய மக்கள் சக்தி | 01 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 01 |

### ஊர்காவற்றுறை பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| ஈ.பி.டி.பி | 4+0 |
| தமிழ்த் தேசியப் பேரவை | 2+1 |
| தேசிய மக்கள் சக்தி | 2+1 |
| தமிழரசுக் கட்சி | 0+2 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 0+1 |

### பருத்தித்துறை பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 09 |
| தேசிய மக்கள் சக்தி | 01 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 01 |
| சுயேச்சை | 01 |

### வலி. தென்மேற்குப் பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 01 |
| தமிழரசுக் கட்சி | 08 |
| தேசிய மக்கள் சக்தி | 02 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 04 |
| ஈ.பி.டி.பி | 01 |

(அ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் – யாழ். மாவட்டம்

நேற்று நள்ளிரவு வரையான முன்னிலை முடிவுகள்

### பருத்தித்துறை நகரசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 05 |
| தமிழரசுக் கட்சி | 03 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 01 |

### வலி. தெற்குப் பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 14 |
| தமிழ்த் தேசியப் பேரவை | 03 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 01 |

### காரைநகர் பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழ்த் தேசியப் பேரவை | 2+0 |
| ஐக்கிய தேசிய கட்சி | 2+0 |
| சுயேச்சை | 2+0 |
| தேசிய மக்கள் சக்தி | 0+2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 0+2 |
| தமிழரசுக் கட்சி | 0+1 |

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் – வவுனியா

நேற்று நள்ளிரவு வரையான முன்னிலை முடிவுகள்

### வெங்கல செட்டிகுள பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 03 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 03 |
| தேசிய மக்கள் சக்தி | 02 |
| ஜனநாயக தேசியக் கூட்டணி | 02 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 02 |

### வவுனியா வடக்கு பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 04 |
| தமிழ்த் தேசியப் பேரவை | 02 |
| தேசிய மக்கள் சக்தி | 02 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 02 |
| (நள்ளிரவு வரை 4 வட்டார முடிவுகள் வெளிவரவில்லை) | |

### வலி. மேற்குப் பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 10 |
| தமிழ்த் தேசியப் பேரவை | 03 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 01 |

### வவுனியா நகரசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 04 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 03 |
| தொழிலாளர் கட்சி | 02 |
| சுயேச்சை | 01 |

### வவு. தெற்கு சிங்கள பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 07 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 01 |
| சுயேச்சை | 01 |

### வலி. கிழக்குப் பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 6+5 |
| தேசிய மக்கள் சக்தி | 9+0 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 4+1 |
| தமிழ்த் தேசியப் பேரவை | 2+3 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 0+2 |
| சுயேச்சை 1 | 0+2 |
| சுயேச்சை 2 | 0+1 |
| ஈ.பி.டி.பி | 1+0 |

## வாக்களிப்பு நிலையங்களில் மாவட்டச்செயலர் கண்காணிப்பு

யாழ்ப்பாணம், மே 7

உள்ளூராட்சிசபைத் தேர்தலை முன்னிட்டு நேற்றுச் செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டத்தின் சில வாக்களிப்பு நிலையங்களுக்கு யாழ்.மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும், மாவட்டப் பதில் செயலருமான மருதலிங்கம் பிரதீபன் நேரில் சென்று நிலைமைகளைக் கண்காணித்தார். (ச-66)




## யாழில் நண்பகல் வரை வெறிச்சோடிய சாவடிகள்

யாழ்ப்பாணம், மே 7

உள்ளூராட்சிமன்றத் தேர்தலானது யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று சுமுகமாக நடைபெற்ற நிலையில் பி.ப. 12.30 மணிவரை 34.48 வீதமான வாக்குகளே பதிவுசெய்யப்பட்டிருந்தன என யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

வாக்களிப்பு மந்தகதியில் இடம்பெற்றதுடன் குறைந்தளவு வாக்காளர்களே வாக்களிப்பதை அவதானிக்கமுடிந்தது. இதனால் வாக்களிப்பு நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன. (ச-[illegible])




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் – கிளிநொச்சி

நேற்று நள்ளிரவு வரையான முன்னிலை முடிவுகள்

### கரைச்சிப் பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 20 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 01 |

### பூநகரி பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 10 |
| ஈ.பி.டி.பி | 01 |

### பச்சிலைப்பள்ளி பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 06 |
| தேசிய மக்கள் சக்தி | 01 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 01 |

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் – முல்லைத்தீவு

நேற்று நள்ளிரவு வரையான முன்னிலை முடிவுகள்

### துணுக்காய் பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 4+0 |
| தமிழ்த் தேசியப் பேரவை | 1+2 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 2+0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1+0 |
| தேசிய மக்கள் சக்தி | 0+1 |
| சுயேச்சை | 0+1 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 0+1 |

### கரைதுறைபற்று பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 13 |
| தமிழ்த் தேசியப் பேரவை | 04 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 01 |



# வடக்கில் 6 ஆயிரம் ஏக்கர் அரசு சுவீகரிக்க எத்தனிப்பு

சர்வதேசத்தை நாடி தடுப்போமென தமிழ்த்தேசியப் பேரவை சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 7

வர்த்தமானியின் பிரகாரம் வடக்கு மாகாணத்தில் 6 ஆயிரம் ஏக்கர் கரையோர நிலப்பரப்பைச் சுவீகரிப்பதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தலை அரசு திருப்பப்பெறாவிடின் அரசின் நடவடிக்கைகள் ஸ்தம்பிக் கும் வகையில் போராட்டங்களை நடத்தத் தயார் எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். யாழ். கொக்குவி லில் அமைந்துள்ள தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


யாழ்ப்பாணத்தில் 3 ஆயிரத்து 669 ஏக்கர் காணிக ளும், முல்லைத்தீவில் ஆயிரத்து703 ஏக்கர் காணிக ளும், கிளிநொச்சியில் 515 ஏக்கர் காணிகளும், மன் னாரில் 54 ஏக்கர் காணிகளும் என மொத்தமாக 5 ஆயிரத்து 941 ஏக்கர் காணிகள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளன.

அரசாங்கம் தமிழ்மக்களின் நலன்களுக்கு நேர் மாறாக எடுத்துள்ளதொரு நடவடிக்கையாகவே இந்த நடவடிக் கையை நாங்கள் கருதுகின்றோம். இந்த விவகாரத்தில் அரசாங்கம் வெற்றிபெற்றால் தமிழ்மக்களின் இருப்பு மிகப்பெரியளவில் கேள்விக்குட்படுத்தப்படும்.

எனவே இலங்கையிலுள்ள ஐக்கியநாடுகள் சபையின் உயர்ஸ்தானிகரை எதிர்வரும் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம்.

அத்துடன் ஐக்கியநாடுகள் சபையில் இலங்கையின் தீர்மானம் தொடர்பாக அக்கறை செலுத்தியிருக் கக்கூடிய நாடுகளின் தூதரகங்க ளையும் நாங்கள் சந்திக்கவிருக்கின்றோம்.

இதுதொடர்பான வர்த்தமானி அரசாங்கத்தால் உடன டியாக மீளப்பெறாதுவிடின் நாங்கள் வடக்கு-கிழக்குத் தமிழ்மக்களுடன் பலம்பெயர் மக்களையும் முழுமை யாக அணிதிரட்டிப் போராட்டங்களைத் தீவிரமாக முன் னெடுப்போம் - என்றார். (ச-33.66)



# கதிர்காம யாத்திரைக்கு உதவிகள் வழங்கிவைப்பு!

யாழ்ப்பாணம், மே 7

கதிர்காமப் பாதயாத்திரைக் குழுவினருக்குப் பளை கரந்தாய்க் கிராமத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தேநீருக்குத் தேவையான பொருள்கள், பிஸ் கட் வகைகள் மற்றும் சவர்க்கார வகைகள் என்பன சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தி னரால் நேரடியாக வழங்கி வைக்கப்பட்டன.

கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழாவை முன்னிட்டு கதிர்காமக் கந்தன் ஆலயம் நோக்கிய பாதயாத்திரை வடமராட்சி தொண்டைமா னாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலி ருந்து கடந்த வியாழக்கிழமை காலை ஆரம்பமா னமை குறிப்பிடத்தக்கது. (ச-22.66)

தேர்தல் கடமையில் ஈடுபட்ட

# அரச ஊழியர்களுக்கு இன்று விடுமுறை!

யாழ்ப்பாணம், மே 7

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் பணி களில் உதவிச் சேவைகளை வழங்கும் கடமைகளில் ஈடுபட்டு, அதற்கான வரவுச் சான்றிதழை சமர்ப்பிக்கும் அரச ஊழியர்களுக்கும் இன்று கடமை விடுமுறை வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழு அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் சுற்ற றிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



# மக்களின் தீர்ப்பு!

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுற்று, அதன் முடிவுகளும் நேற்றிரவே வெளிவந்திருக்கின்றன. தமிழர்களின் தாயகமான வடக்கு கிழக்கில், தமிழ்த் தேசியக் கட்சிகள் பெருவெற்றியைப் பதிவுசெய்திருக்கின்றன. இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியப் பேரவை என கட்சிக் கொடிகளின் கீழ் மக்கள் பிரிந்துள்ளபோதிலும், தமிழ்த் தேசியக் கொள்கைகளின் அடிப்படையில் அவர்கள் ஒன்றுபட்டுள்ளனர். ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி உட்பட தேசியக் கட்சிகளின் வாக்குவங்கி நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றதை விடவும் சரிந்திருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால், சில தொகுதிகளில் இதுவரை இல்லாத அளவுக்கு வரலாற்று வெற்றியையும் தமிழ்த் தேசியக் கட்சிகள் பதிவுசெய்திருக்கின்றன. 'தாம் தமிழ்த் தேசியத்துடன்தான்' என்ற செய்தியை தமிழ் மக்கள் வலுவாகச் சொல்லியுள்ளனர்.

வடக்கு கிழக்கில் மட்டுமல்ல, நாட்டின் இதர பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஆதரவு அலை சடுதியாகக் குறைந்திருக்கின்றது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும், பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன கூட்டணி அமைக்கும் பட்சத்தில், பல சபைகளில் எதிர்க்கட்சியில் அமர வேண்டிய நிலைக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் கிடைத்த வெற்றியுடன் ஒப்பிடுகையில், உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்குப் பெரும் அடியாகவே அமைந்திருக்கின்றன என்பது வெள்ளிடைமலை.

ஏன் இந்தத் திடீர்ச் சரிவு? மிகக்குறுகிய காலத்தில் அடுத்தடுத்து இரண்டு தேர்தல்களில் திசைகாட்டிக்கு வாக்களித்த மக்கள் இம்முறை தங்களின் எண்ணத்தையும், சின்னத்தையும் மாற்றியிருக்கின்றனரே! அது ஏன்? இந்தக் கேள்விகளுக்கான பதில்களை மிக விரைவாகத் தேடவேண்டிய கட்டாயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கின்றது.

ஆட்சிப்பீடத்தில் ஏறி ஆறு மாதங்கள் முழுமையாகக் கடந்த பின்னரும், மக்களுக்கு வழங்கிய ஏராளமான வாக்குறுதிகளின் ஆரம்பப் புள்ளியைக்கூட அநுர அரசாங்கம் தொட்டுப் பார்க்கவில்லை. தனிப்பெரும்பான்மை என்றதிராணியில்தான் அனைத்து விடயங்களையும் அணுகத் தலைப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்கம், அரசியற்கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு என எந்தவொரு விடயத்திலும் காத்திரமான பணிகளை ஆற்றாமல், மக்கள் தங்கள் மீது வைத்த அதீத நம்பிக்கையை பணயமாக்கிப் பயணிக்கத் தலைப்பட்டனர். இதன் விளைவாகவே, தற்போது மக்களின் கோபத்துக்கும் அரசாங்கம் ஆட்பட்டுள்ளது.


பேரம் பேசல்களுடன் கணிசமான தொகுதிகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கலாம், அமைக்காமலும் விடலாம், ஆனால் ஒன்றைமட்டும் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பின்னடைவு, அரசாங்கத்துக்கு ஒரு படிப்பினை. செய்யவேண்டிய அவசிய மாற்றங்களை விரைந்து செய்யும்படியும், எதிர்க்கட்சித் தோரணையில் குற்றச்சாட்டுகளை முன்வைத்துக்கொண்டிருக்காமல் துரிதமாகச் செயலாற்றும்படியும் விரல் மைகளால் மக்கள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றனர். எனவே, அரசாங்கம் சுயபரிசோதனைகளில் ஈடுபடுவதற்குத் தவறுமானால், அதன் விளைவுகள் பாரதூரமானவையாகவே அமையும். தேர்தல் மூலம் கோத்தாபய தோற்கடிக்கப்படவில்லை. இது யாருக்குப் புரிகின்றதோ இல்லையோ தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்குத் தெளிவாகப் புரியும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

வாழ்க்கையின் நோக்கம் மகிழ்ச்சி என்று கருதாதபோது மட்டுமே மனிதர்களால் மகிழ்ச்சியாக இருக்கமுடியும்.

– ஜார்ஜ் ஆர்வெல் –




## சிக்கன்குனியாவை கண்டறியும் உபகரணத்துக்குப் பற்றாக்குறை

கொழும்பு, மே 7

நாட்டில் தீவிரமாகப் பரவிவரும் சிக்கன்குனியா நோயை இனங்காண்பதற்கான மருத்துவ உபகரணங்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் அண்மைக்காலமாக சிக்கன்குனியா நோய் தீவிரமாகப் பரவிவருகின்றது.

சிக்கன்குனியா நோயை இனங்காண்பதற்கு ஒருவர் நோய்வாய்ப்பட்ட ஒருவாரம் கழித்து மருத்துவப் பரிசோதனையொன்றை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும். எனினும், அதற்கான மருத்துவ உபகரணங்கள் தற்போது பெரும் பற்றாக்குறையாக இருக்கின்றன. இதனால் நோயைக் கண்டறிந்து அதற்கான உரிய சிகிச்சைகளை அளிப்பதில் மருத்துவர்கள் சிக்கலைஎதிர்கொண்டுள்ளனரெனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## கடனைச் செலுத்தாத வேட்பாளர் கைது!

அநுராதபுரம், மே 7

இந்த ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அநுராதபுரம், ஹொரவ்பொத்தானை பிரதேசசபைக்குப் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் விவசாயக் கடன்களைத் திருப்பிச்செலுத்தாத குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் தேகெதிபொத்தான பகுதியைச் சேர்ந்த 52 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த வேட்பாளர் 2023 ஆம் ஆண்டில் எடுத்த 29 ஆயிரத்து 500 ரூபா விவசாயக் கடனைத் திருப்பிச்செலுத்தாததற்காக நீதிமன்ற உத்தரவுக்கமைய கைது செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## சுங்கத்தில் வரி ஏய்ப்பு பெயர்ப்பட்டியல் வெளியீடு

கொழும்பு, மே 7

வரி ஏய்ப்புச் செய்யும் நிறுவனங்களினதும் தனிநபர்களினதும் விவரங்களை சுங்கத் திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வரி ஏய்ப்புச் செய்பவர்களை ஒழுங்காக வரி செலுத்தப்பண்ணலாம் எனச் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையினூடாக ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் சட்டவிரோத செயற்பாடுகளைக் குறைக்கலாம் எனவும் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## தேர்தல் பணிக்காக சென்றவர் மரணம்

கண்டி, மே 7

கண்டி, பேராதனைப் பொலிஸ் பிரிவில் உள்ள கன்னொருவ ஆரம்பப் பாடசாலையில் தேர்தல் பணிக்காகச் சென்ற பெண் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். திடீர் சுகவீனம் காரணமாக பேராதனை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர் உயிரிந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அதிகாரி கன்னொருவ தாவர மரபணு வள மையத்தின் மேம்பாட்டு அதிகாரி என்றும், 33 வயதுடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பேராதனைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-இ)



## அரகலயவால் ஏற்பட்ட சேதத்திற்கு 620 மில்லியன் இழப்பீடு பெற்ற 92 உள்ளூராட்சி உறுப்பினர்கள்

கொழும்பு, மே 7

அரகலயப் போராட்டத்தின்போது தமது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாகத் தெரிவித்து 92 உள்ளூராட்சி உறுப்பினர்கள் 620 மில்லியன் இழப்பீடு பெற்றுள்ளனரென அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரகலயப் போராட்டத்தின்போது தமது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாகக் கூறி 1.22 பில்லியன் இழப்பீடு பெற்ற அமைச்சர்களினதும், நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் விபரங்கள் பெப்ரவரி 2ஆம் திகதி சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-41-6)

நாளை

வியாழக்கிழமை - சித்திரை 25

08.05.2025

சுபநேரம் :07.25- 08.55


ராகுகாலம் : 01.25- 02.55

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பின் காட்சிகள்



யாழ்ப்பாணம்
















திருகோணமலை



கிளிநொச்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பின் காட்சிகள்


வவுனியா


முல்லைத்தீவு


மன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## தில்லையம்பலவாணர் கோபாலகிருஷ்ணன்

(விவாக இறப்பு, பிறப்பு பதிவாளர் உரிமையாளர் சபேஸ் ரேடர்ஸ்- புத்தூர்
சமாதான நீதவான், நிரந்தர தர்மகத்தா உறுப்பினர்,
யா/சோமாஸ்கந்தக் கல்லூரி- புத்தூர்)

புத்தூர் மேற்கு புத்தூரைச் சேர்ந்த தில்லையம்பலவாணர் கோபாலகிருஷ்ணன் அவர்கள் நேற்றுமுன்தினம் (05.05.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலவாணர் மற்றும் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சுதாஜினி (ஆசிரியை, யா/சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்) அன்புக் கணவரும், துவாரகன், தமிழினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சம்பந்தன் மற்றும் விமலன் (பணிப்பாளர் வடமாகாணம் காணி சீர்திருத்த ஆணைக்குழு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுகுமார்-ஜெயசிறி (ஜேர்மனி), தற்பரன் (சட்டத்தரணி), Dr நமிலாதேவி, நளினி, சந்தானலஷ்மி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2025) புதன்கிழமை பி.ப 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு 29.10.1968 — இறப்பு 05.05.2025

"சந்திரோதயம்"
புத்தூர் மேற்கு, புத்தூர்.

தகவல் :
குடும்பத்தினர்
077 780 5394, 077 773 3058

(CS/3126) J-1

# மரண அறிவித்தல்



## செல்லையா சிவப்பிரகாசம்

யாழ் திருநாவலூர் புலோலி மேற்கு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், பிரித்தானியா Coventry ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட செல்லையா சிவப்பிரகாசம் அவர்கள் கடந்த 17-04-2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஞானசவுந்தரி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், பொன்னம்பலம், அருளம்பலம், ராமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், இராசமணி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், புவனேஸ்வரி அவர்களின் அன்பு மைத்துனரும், வேலாயுதம், கனகசபை, புவனேஸ்வரி, லக்சுமி, கிருஸ்ணமூர்த்தி, இளங்கோ ஆகியோரின் அன்பு மைத்துனரும், செல்லக்கண்ணன் (பிரித்தானியா), செல்லகுமார் (கனடா), சங்கீதா (இலங்கை), பிறேம்குமார (பிரித்தானியா), கிறீஸ்குமார் (பிரித்தானியா), நந்தகுமார் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரண்ணியா, ஏஞ்சல், விமலன், சிவசாந்தி, துசாந்தி, நித்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆருஜன், அனுயினி, அக்ஷயா, கெய்டன், கர்சா, அனுரந்தன், ஆருத்ரன், மித்ரன், டிவிஷான், திஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2025) பிரித்தானியாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தோற்றம் 11.08.1947 — மறைவு 17.0[illegible].2025

அன்னாரின் இறுதிக்கிரியை
நிகழ்வுகளை தரப்பட்டுள்ள
linkல் சென்று

தகவல் குடும்பத்தினர்
077 998 7060

(CS/58172) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு வருகிறார் உலகவங்கியின் தலைவர்

கொழும்பு, மே 7

**உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா இன்று புதன்கிழமை இலங்கைக்கு வருகைதரவுள்ளார்.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் இலங்கைக்கு வருகைதரவுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தி சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் முயற்சியின் ஒரு பிரதான அங்கமாக அஜய் பங்காவின் வருகை உள்ளது.

அஜய் பங்காவின் வருகை உலக வங்கி மற்றும் இலங்கைக்கு இடையிலான 70 ஆண்டு கூட்டாண்மையை பிரதிபலிக்கிறது.

அஜய் பங்காவின் வருகையின் போது இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, முதலீட்டை அதிகரிப்பது ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

அஜய் பங்கா, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரியா மற்றும் தனியார் துறைத்தலைவர்களை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (ச-இ)

## ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் பிரதமர் ஹரிணியுடன் சந்திப்பு

கொழும்பு, மே 7

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைக் கண்காணிப்புப் பணியின் ஒரு பகுதியாக, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை ஐரோப்பிய வெளி விவகார சேவையின் தெற்காசியப் பிரிவின் தலைவர் சார்லஸ் வைட்லி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

கலந்துரையாடலில் வறுமை ஒழிப்பு, டிஜிற்றல் பரிமாற்றம் மற்றும் க்ளீன் சிறீலங்காத் திட்டம் உள்ளிட்ட அரசாங்கத்தின் பிரதான முன்னுரிமைகள் குறித்து கவனம்செலுத்தப்பட்டன. அத்துடன் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகைகளுக்காக மீளவும் விண்ணப்பம் செய்யும்முறைகுறித்தவழிகாட்டுதலை வழங்கினர்.

பொருளாதாரம், கலாசாரம் மற்றும் சுற்றுலாத்துறைகள் மூலம் இலங்கையுடனான உறவுகளை மேம்படுத்துவதில் ஐரோப்பிய ஒன்றியம் கவனம் செலுத்துவதாக இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் கார்மென் மொரேனோ இதன் போது தெரிவித்தார். (ச-இ)



## மரக்கறிகள் விலையுயர்வு

யாழ்ப்பாணம், மே 7

மரக்கறி வகைகளின் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

இந்த மாதத்தில் ஆலயத் திருவிழாக்கள் மற்றும் சுபவைபவங்கள் இடம்பெற்றுவருவதால் மரக்கறிகளின் விலை எகிறியுள்ளது.

திருநெல்வேலிச் சந்தையில் நேற்றைய நிலைவரத்தின்படி, கத்தரிக்காய் கிலோ 540 ரூபாவாகவும் பாவற்காய் 500 ரூபாவாகவும் பயிற்றங்காய் 450 ரூபாவாகவும் தக்காளிப்பழம் 900 ரூபாவாகவும் கரட் 800 ரூபாவாகவும் பூசணிக்காய் 200 ரூபாவாகவும் பீற்றூட் 600 ரூபாவாகவும் போஞ்சி 800 ரூபாவாகவும் பச்சைமிளகாய் 150 ரூபாவாகவும் கீரை ஒரு பிடி 160 ரூபாவாகவும் விற்பனைசெய்யப்பட்டன. (ச-17)



## பகிடிவதை விவகாரம் மேலுமிருவர் கைது!

கொழும்பு, மே 7

பகிடிவதை காரணமாக மன உளைச்சலுக்குள்ளான நிலையில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப் பீடத்தைச்சேர்ந்த 23 வயதுடைய மாணவன் கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் தொடர்பில் மேலும் இரண்டு மாணவர்கள் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்று செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை பலாங்கொடை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பொலிஸ்அலுவலர் உயிர்மாய்ப்பு

கொழும்பு, மே 7

அம்பாறை, பதியதலாவ பொலிஸ் நிலைய வளாகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிபில பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## சப்ரகமுவ பல்கலை விவகாரம் 11 பேருக்கு வகுப்புத்தடை

கொழும்பு, மே 7

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவரின் மரணம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 11 பேருக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. புஸ்ஸல்லாவை இஹலகம பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சரித் தில்ஷான் என்ற மாணவன் கடந்த 29 ஆம் திகதி பகிடிவதைக்கு உள்ளானதை அடுத்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்று செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)




ஒருமாதிரி பெரும் இழுபறிப்பட்டு உந்த உள்ளூராட்சித் தேர்தல் நேற்றையோட முடிஞ்சுது. இனித்தான் உந்தத் தேர்தல் காலத்தில நடந்த கூத்துகளெல்லாம் ஒவ்வொண்டா வெளியில வரும். அப்பிடி வெளிப்படேக்க அதுகளை உங்களுக்குச் சொல்ல பட்சியும் மறக்காது.

இந்தமுறை வடக்கில தமிழ்க் கட்சியள் எல்லாமே தாங்கள் வெல்லுறமோ இல்லையோ ஆனால் திசைகாட்டி வெல்லக்கூடாது எண்டதில் திடமா இருந்தவை. அவையளின்ர பிரசாரமும் திசைகாட்டியைச் சுத்தித்தான் நடந்தது. ஆனாலும் என்னதான் வெளியில தங்களுக்குள்ள கொழுவுப்படுறேல எண்டு எங்கட தமிழ்க்கட்சியள் சொல்லிக்கொண்டாலும், வழக்கம்போல அடுத்தவைக்கு குழிபறிக்கிற வேலையளையும், ஆளுக்காள் முட்டுப்பட்டு கொம்பேறிமூக்கன் மாதிரி கறுவியம் வைச்சு காரியம் சாதிக்கிற விளையாட்டுகளும் நடக்கத்தான் செய்தது. என்னதான் வீட்டுக்க பிரச்சினை இல்லையெண்டு சொன்னாலும், கிளிநொச்சிச் சடையாரும், அப்புக்காத்து உடையாரும் இந்தமுறை தனித்தனிப் பாதையில தான் பிரசாரம் செய்தவை. 'நான் உன்ர எல்லைக்குள்ள வரமாட்டன், நீ என்ர எல்லைக்குள்ள வரக்கூடாது' எண்டு கிளிநொச்சிச் சடையார் முதலே கோடு கீறிப்போட்டார். உடையாருக்கும் அப்பிடிச் சடையார் சொன்னபிறகு அதைத் தாண்டுறது கௌரவப்பிரச்சினைதானே. அதால உடையார் கிளிநொச்சிப் பக்கம் வீட்டுக்கட்சிக்காக பிரசாரம் செய்யப்போகேலை. அதைமாதிரி கிளிநொச்சிச் சடையாரும் மறந்தும்கூட யாழ்ப்பாணப் பக்கம் கால்வைக்கேலையாம்.

இப்பிடிப்பட்ட நிலைமையில, ஒரு பேட்டியில 'கிளிநொச்சியில நடக்கிற கடைசிக் கூட்டத்துக்கு கட்டாயம் நான் போவன்' எண்டு உடையார் சொல்லியிருக்கிறார். அவ்வளவுதான், கிளிநொச்சியில பெரும் குழப்பம். கூட்டத்துக்கு அழைப்புக் குடுக்காமல் எப்பிடி அவர் வரமுடியும்? எண்டு அங்கையுள்ள வீட்டுக்கட்சிக்காரர் எல்லாரும் உடையாருக்கு எதிராப் பொங்கத் தொடங்கிட்டினம். 'இஞ்ச ஆள் வந்துட்டு உருப்படியாத் திரும்பிப் போடுவாரோ?' எண்டு விசயத்தைக் கேள்விப்பட்ட சனங்கள்கூட உக்கிரமாக் கதைக்க வெளிக்கிட்டுதுகள். தானொருக்காப் போய் மேடையில தலையைக் காட்டினால், எப்பிடியும் ஒரு குழப்பம் வருமெண்டு உடையாருக்குத் தெரியும். எண்டாலும் அப்பிடித் தெரிஞ்சும் அந்தக் கூட்டத்துக்கு கட்டாயம் போவன் எண்டு பப்ளிக்காச் சொன்னால், குழப்பத்தை உருவாக்க நினைக்கிறார் எண்டுதானே அர்த்தம். சொந்தக் கட்சிக் கூட்டத்தையே குழப்ப ஆராவது நினைப்பினமோ? ஆனால் உடையார் அப்பிடி நினைப்பாராம். கிளிநொச்சியில கட்சியை உடைக்கிறதுதான் உடையாரின்ர திட்டமாம். இது தெரிஞ்சுதான் அங்கத்தைக் கட்சிக்காரரும், சனமும் இவர் கூட்டத்துக்கு வாறனெண்டதும் நெருப்பெடுத்தவை. ஆனால் ஆளுக்கு அங்கத்தை சிற்றிவேசன் தெரிஞ்சதால, போகாமல் நிண்டிட்டாராம். ஒருவேளை உடையார் கிளிநொச்சிக் கூட்டத்துக்குப் போயிருந்தால் பெரும் பம்பல் ஒண்டு பார்த்திருக்கலாம் கண்டியளோ.


padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 14 - 11 - 1957

ஆண்டவன் அடியில் 05 - 05 - 2025



## திரு. கந்தசாமி சற்குணராஜா

(The Quality Foods Supply (Pvt) Ltd - Kirulapone,
Amma Appa Arcade - கனகம்புளியடிச் சந்தி ஆகியவற்றின் உரிமையாளர்)

யாழ்.தென்மராட்சி சரசாலை வடக்கை பிறப்பிடமாகவும், கொழும்பு கிருலப்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கந்தசாமி சற்குணராஜா அவர்கள் சிவபதம் அடைந்தார். அன்னார் சரசாலை வடக்கைச் சேர்ந்த காலம் சென்ற அம்பலவாணர் கந்தசாமி தங்கம்மா ஆகியோரின் இளைய மகனும் சரசாலை தெற்கைச் சேர்ந்த ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் கனகரத்தினம், பாலாம்பிகை ஆகியோரின் அன்பு மருமகனும் தங்கராசா, ஞானலிங்கம், வீரசிங்கம், காலம்சென்ற இரத்தின சிகாமணி ஆகியோரின் அன்புச்சகோதரனும் அருந்தவமலர், அருந்தவராசா, இராசமாணிக்கம், கமலாதேவி, கமலேஸ்வரன், கருணாவதி ஆகியோரின் மைத்துனரும் கிஷோர்நிகா, துசாரிகா, நிரோஜா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சுகிதரன், கஜேந்திரன், சுகுணன் ஆகியோரின் மாமனாரும் நிஜேஷ், சௌமியா, ஆர்கலி, ஆர்விழி, இந்திரஜித், வெனோரா ஆகியோரின் பிரியமிகு தாத்தாவும் ஆவார். அன்னாரின் திருவுடல் புதன், வியாழன் ஆகிய தினங்களில் 53/11, கிருலப்பனை அவெனியூவில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை வியாழக்கிழமை (08.05.2025) மாலை கிருலப்பனை, பூர்வாராமை வீதியில் அமைந்துள்ள பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள்.

077 231 7619
076 801 6763

# புற்றுநோய் சிகிச்சை நிலையம் சாவகச்சேரியில் நிர்மாணம்

யாழ்ப்பாணம், மே 7

சாவகச்சேரி புத்தூர் வீதியிலுள்ள கெருடாவில் நாச்சிமார் கோவிலுக்கு அருகில் புற்றுநோய் சிகிச்சை நிலையமொன்று சுமார் 30 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

தென்மராட்சியிலுள்ள ஆங்கில ஆசிரியர் ஒருவரின் புலம்பெயர்ந்து வாழும் மகனின் நிதியுதவியில் இந்த சிகிச்சை நிலையம் அமைக்கப்படவுள்ளது. இங்கு நோயாளர்கள் தங்கிநின்று சிகிச்சை பெறலாம் என்றும் சிகிச்சைகள் இலவசமாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-25, 131)

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 04 . 1948

உதிர்வு 06 . 05 . 2025



## பெரியதம்பி மகேஸ்வரி

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் தர்மபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி மகேஸ்வரி அவர்கள் நேற்று (06.05.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - சின்னம்மாவின் அன்பு மகளும், பெரியதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லத்துரை, நாகேஸ்வரி, செல்வராசா மற்றும் தங்கவேல், தர்மராசா, இலங்கேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தயாநிதி மற்றும் தயாளினி, தயாகரன், சுதாகரன், பிரபாகரன், விஜிதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், உதயகுமார், சுஜிகலா, கலைவாணி, காலஞ்சென்ற சிவரூபினி ஆகியோரின் மாமியாரும், சுனைனா, சிவசுஜைன், துவாரகன், துவாரகா, காலஞ்சென்ற யீவிதன், மற்றும் திவாரகன், புரட்சிகன், பிருத்திகா, அஸ்மியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணி அளவில் பெரியகுளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(CR/44940) J-1

# வாக்குப்பதிவுகள் கண்டியில் மந்தம்

கண்டி, மே 7

கண்டி மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவுகள் நேற்று செவ்வாய்க்கிழமை மிகவும் மந்தகதியில் பதிவாகியதாக கண்டி மாவட்டச் செயலாளர் இந்திக உடவத்த தெரிவித்துள்ளார்.

சராசரி 20 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளே நண்பகல் 12 மணிவரை பதிவாகியது.


அதேஅவளை தேர்தல் காலத்தில் எவ்வித வன்செயல்களும் இடம்பெறவில்லை. தேர்தல் அமைதியாக நடைபெற்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ச-இ)

# மரண அறிவித்தல்

மலர்வு 05 . 03 . 1945

உதிர்வு 04 . 05 . 2025



## திரு . சின்னத்துரை சண்முகலிங்கம்

(முன்னாள் உபஅதிபர் ய /சாங்குவேலி அ.த.க பாடசாலை,
உரிமையாளர் - சண்யோகோப்பி & கூல்பார் - சுன்னாகம்)

**இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும், இரத்தின வாசம், இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்துரை சண்முகலிங்கம் அவர்கள் 04.05.2025 ஞாயிற்று கிழமை இயற்கை எய்தினார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - வில்லிமலர் தம்பதியினரின் பாசமிகு புதல்வரும், காலஞ்சென்றவர்களான திருவிளங்கம் - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் பாசமிகு கணவரும், பிரசாந்த், துஷித்தா, ரஜீவ்சாந்த் ஆகியோரின் அன்புத்தந்தையும், சுமித்திரா, கோகுலன், சத்தியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திவ்யேஷ், ரிஷிகேஷ் ஆகியோரின் அன்பு அம்மப்பாவும், சுந்தரலிங்கம், சிவநேசலிங்கம், தேவசேனா, காலம் சென்ற இந்திரசேனா, மற்றும் விஜயசேனா, அமிர்தலிங்கம், பதுமசேனா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மண்டலநாயகி, பாமதி, காலஞ்சென்றவர்களான உருத்திராங்கதன், கனகநாயகம் மற்றும் சுந்தரலிங்கம், லோகேஸ்வரி, அருள்நேசன் ஆகியோரின் அன்பு சகலரும், யோகராஜா, மாலினிதேவி, ஸ்ரீஸ்கந்தராஜா, சகலகலாதேவி, கௌரிதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.05.2025 வியாழக்கிழமை பகல் 09:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு இணுவில்

தகவல்: குடும்பத்தினர்.

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 . 11 . 1954

மறைவு 15 . 04 . 2019



## அமரர் பொன்னையா சிவராசசிங்கம்

( ஓய்வு பெற்ற இ.போ.ச சாரதி )

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகி போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
விண் நோக்கிச் சென்று ஆண்டுகள் ஆறு ஆனாலும்
எம் நெஞ்சில் மறையாமல் நிலைத்திருப்பீர்கள் ..

கேணியடி வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடனடி வெளிநாட்டு பயணம்**

லண்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மன் நாடுகளுக்கு Visit Visaவும், மாலைதீவு, மலேசியா நாடுகளுக்கு Work Visa, Visit Visa வீசா ஆலோசனைகளும் வழங்கப்படும்.

தொடர்பு: 077 457 3783

**யாழ் உற்பத்திப் பொருட்கள் தேவை**

வெள்ளவத்தை தெஹிவளைக்கு இடையில் புதிதாக திறக்கப்படவிருக்கும் Super Market க்கு யாழ். கிளிநொச்சி, வவுனியா இடங்களைச் சேர்ந்த தரமான உள்ளூர் உற்பத்தி பொருட்கள் தேவை.

(CR/44941) J-1

076 544 2220, 075 576 2220

**வகுப்புக்கள் ஆரம்பம்**

மகளிருக்கான Cakes, Icing, Beautician, கூந்தல் அலங்கரிப்பு,தையல் பயிற்சிகளுக்கு விசேட கட்டணச் சலுகைகளுடன்
கிழமை நாள்/ சனி-ஞாயிறு
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன!
**யாழ் கலாலயா பயிற்சியகம்**
**விக்ரோறியா வீதி,**
**(யாழ் போதனா வைத்திய சாலை பின் வீதி,)**



077 711 0383,
Whatsapp No- 074 217 0383

# அமைதியான தேர்தல் அரசாங்கம் பெருமிதம்



**யாழ்ப்பாணம், மே 7**

**முன்னெப்போதும் இல்லாத வகையில் அமைதியான தேர்தல் ஒன்றை அரசாங்கம் நடத்திக்காட்டியுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

குருநாகல் சென். ஜோன்ஸ் கல்லூரியில் தன் குடும்பத்தினர் சகிதம் வாக்களிக்க வந்திருந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த காலங்களைவிட நாட்டில் ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளது. தேர்தல் ஒன்று நடைபெறுகின்றதா என்று சந்தேகிக்கும் அளவுக்கு நேற்று அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்றது. அரசாங்கம் அந்தளவுக்கு அமைதியான தேர்தல் ஒன்றை நடத்திக்காட்டியுள்ளது. படிப்படியாக ஏனைய விடயங்களிலும் இந்த நாட்டில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவருவோம் - என்றார். (ச-இ)



2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ ராஜகிரிய, கொடுவேகொட விவேகாராம விகாரை, சந்திரலோக தஹம் பாடசாலை கட்டடத்தில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் பாரியார் சகிதம் சென்று தனது வாக்கை அளித்தார். (ச-இ)

## கேள்வி அறிவித்தல்

## சபை நிதி 2025 ( கட்டம் 3)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

1. வலி தெற்கு பிரதேச சபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை செயலாளர், வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017, தொலைநகல் 021-2240327) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2025.05.07 - 2025.05.20 காலப் பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து ரூ. 3.500.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) 2025.05.21 திகதி 10.30 மணிக்கு முன்னர் தலைவர், பிரதேச பெறுகைக்குழு, வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மு.ப 10.30 மணிக்கு 2025.05.14 அன்று நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை வரி நீங்கலாக (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் (நாட்கள்) | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01. | NP/14/41(15)/02/05/CF / 2025/15 | வேம்போலை வீதி புனரமைத்தல், இணுவில் கிழக்கு | 2.48 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 08.07.2025 | 25,000.00 | 05.08.2025 வரை |
| 02. | NP/14/41(15)/02/05/CF / 2025/16 | **தொகுதி 1** 1. ஆலங்கட்டை தோட்டவீதி அமைத்தல், ஏழாலை தெற்கு 2. கலைமகள் வீதியின் உப வீதி அமைத்தல், ஈவினை | 2.03 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 08.07.2025 | 21,000.00 | 05.08.2025 வரை |
| 03. | NP/14/41(15)/02/05/CF/ 2025/17 | **தொகுதி 2** 1. மயிலங்காடு கிறேசர் வீதி அமைத்தல் மிகுதி வேலை, ஏழாலை தெற்கு 2. ஈவினை தெற்கு 4 ஆம் கட்டை வீதி அமைத்தல் (புத்தூர் வீதியில் தொடக்கம்), ஈவினை 3. புத்தூர் வீதியின் 4ஆம் கட்டை எதிர்ப்புற வீதி, ஏழாலை மத்தி | 2.40 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 08.07.2025 | 24,000.00 | 05.08.2025 வரை |
| 04. | NP/14/41(15)/02/05/CF/ 2025/18 | **தொகுதி 3** 1. அறுமன் கலட்டி வீதி 1ம், 2ம் குறுக்கு வீதி அமைத்தல், ஏழாலை தெற்கு 2. குருந்தடி வீதி புனரமைத்தல், ஏழாலை தெற்கு | 2.08 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 08.07.2025 | 21,000.00 | 05.08.2025 வரை |
| 05. | NP/14/41(15)/02/05/CF/ 2025/19 | **தொகுதி 4** 1. மயான வீதி 1ம் ஒழுங்கை உப ஒழுங்கை வீதி அமைத்தல், கந்தரோடை 2. கதிரமலை வீதி 4ம் ஒழுங்கை அமைத்தல் (இடது பக்கம்), சுன்னாகம் தெற்கு | 2.29 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 08.07.2025 | 23,000.00 | 05.08.2025 வரை |
| 06. | NP/14/41(15)/02/05/CF/ 2025/20 | **தொகுதி 5** 1. பூவோடை வீதி 2ம் ஒழுங்கை அமைத்தல், சுன்னாகம் தெற்கு 2. சிவபூதவராயர் வீதி 5ம் ஒழுங்கை அமைத்தல் சுன்னாகம் தெற்கு | 2.28 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 08.07.2025 | 23,000.00 | 05.08.2025 வரை |

**தலைவர்**
**பிரதேச பெறுகைக்குழு,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**

**2025.05.07**

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

**யாழ் மாவட்ட விஸ்வகர்ம நகைத்தொழிலாளர் சங்கம்**

**கௌரவிப்பும் பொதுக்கூட்டமும்**

தலைவர் :- ப.இந்திரகுமார்
இடம் :- J.J Guest house
No.396/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
( வேல் மோட்டோர்ஸ் அருகாமையில்)

**கௌரவிப்பு**

**2024ம்** ஆண்டு புலமைபரிசில் பரீட்சையில் 130 புள்ளிகளுக்கு மேல் பெற்ற விஸ்வகுல நகைத் தொழிலாளர்களின் பிள்ளைகளை கௌரவித்தலும் 70 வயதிற்கு மேல் உள்ள நகைத்தொழிலாளர்களை கௌரவித்தலும்.

01/06/2025ல் கௌரவிப்பு இடம்பெறவிருப்பதால் 15/05/2025ற்கு முன்னதாக விண்ணப்பங்களை தந்துதவும்.

**பொதுக்கூட்டம்**

10/06/2025ல் பொதுக்கூட்டம் இடம் பெறவுள்ளது அங்கத்தவர்களும் விஸ்வகுல நகைத்தொழிலாளர்கள் அனைவரையும் வருகைதரும் படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.


No,231/1, கஸ்தூரியார் வீதி, **யாழ்ப்பாணம்.**
**whatsapp:- 077 222 8482**

**ஜெ.மனோகர்**
**செயலாளர்.**
**T.P:- 077 236 7494**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 07 . 10 . 1935



உதிர்வு 06 . 05 . 2025

## சின்னத்தம்பி தர்மலிங்கம்

**(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)**

கந்தரோடை மடத்தடியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தர்மலிங்கம் அவர்கள் நேற்று (06.05.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-முத்துப்பிள்ளை தம்பதியின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை- செல்லம்மா தம்பதியின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரி (இராசாத்தி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, பாக்கியம், தங்கம்மா, பர்வதம், கந்தசாமி, ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுபாஷ்கரன் (ராஜீ-சுவிஸ்), சுகிர்தா, கேதீஸ்வரன் (ஈசன்-சுவிஸ்), விஜிகரன் (விஜி-சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் கேமேஸ்வரி, குகநேசன், (இளைப்பாறிய கட்டட திணைக்கள பொறியியலாளர்), சசிவதனி, ரஜிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜனனி, சதீனா, விதுசி, மிதுலா, சகானா, சஜிதன், கிருத்திகா, தர்சனா, சஜிந் ஆகியோரின் பாசமிகு பேரனும் அஞ்சனா, ஜானவி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (09.05.2025) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்
077 238 9864
021 205 8531



# மாற்றுத்திறனாளிகள் தின அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு

யாழ்ப்பாணம், மே 7

கண்பார்வையற்றோருக்கான அறக் கட்டளை நிலையத் தால் மாற்றுத்திற னாளிகள் தின மாபெரும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு வருடாந்தம் முன் னெடுக்கப் பட்டுவருகின்றது.

2025 ஆம் ஆண்டுக்கான சீட்டிழுப்பின் முதலாவது சீட்டை வடக்கு மாகாண ஆளுநர் நாக லிங்கம் வேதநா யகன் நேற்றுச் செவ்வாய்க்கி ழமை சம்பிரதா யபூர்வமாகப் பெற்றுக் கொண்டு ஆரம் பித்துவைத்தார்.

(ச-66)

## விற்பனைக்கு

யாழ் பிறவுன் வீதியில் 4 பரப்பு காணியும் 3 பரப்பில் அமைந்த மாடி வீடும் யாழ் சிவகுருநாதன் வீதியில் 4 பரப்பு காணியும் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 16 அடி அகலமும் 216 அடி நீளம் கொண்ட தனிக்கடையும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 6 பரப்பு காணியும் யாழ் ஆஸ்பத்திரி வீதி லேடன் கம்பெனிக்கு முன்பாக 6 பரப்பு காணியும் யாழ் K.K.S வீதியில் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 10 பரப்பில் அமைந்த மாடிக்கட்டமும் யாழ் விக்றோரியா வீதியில் 11 பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு.

தொடர்பு:
077 723 2535

# மரண அறிவித்தல்

## இராசமணி நடராசா



தோற்றம் 15.10.1938 — மறைவு 06.05.2025

முதலாம் கட்டை கல்வயலைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு, மடத்தடிச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசமணி நடராசா அவர்கள் நேற்று (06.05.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசமணி இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் பகவதி அவர்களின் பாசமிகு கணவரும் குணேஸ்வரி, அமரர் குணேந்திரன், யோகேந்திரன் (ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை ஊழியர்), இராசமோகன் (ராங்கோ ஹாட்வெயார்-உரிமையாளர்), .ரவீந்திரன், சிவனேஸ்வரி (சுவிஸ்), முருகேந்திரன், சரவணபவன் (கனடா), கஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராசா (சாயி ஸ்ரோர்ஸ், மடத்தடி-உரிமையாளர்), சுந்தரேஸ்வரி, சாரதாதேவி, இந்திராணி, அமரர் கோபாலகிருஷ்ணன், கமலேஸ்வரி (பரிசாரகர்-வரணி பிரதேச வைத்தியசாலை), நிதிலாரூபினி, தீபா (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும் கிரிஷாந்-சாருகா , சஞ்சீவன்-கிரியா, லக்ஷணன்-நிலாணி, லக்ஷியா-ஜீவன், யதுஷன், ஜானுஷன்- சாம்பவி, ரம்ஜா- பாலநிர்மலன், காருண்யா-ஜெயராஜ், சரண்யா-ஜெயதர்சன், கவிராஜ், துசோபன், ஜவாகர், யாதவன்-சிமோனா, ராகவன், பாரத், டிவேதிகன், பாரிஜா, கார்த்திகா, சுஜிபவன், ஜாகீசன், சோபியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆருத்ரா, கார்மிகா, ஷபரிஸ், ஹரிஸ், டனிக்கா, ரக்ஷிகா, டிபிக்கா, ஜோசித், கன்விகா, ரித்திக், ஜேரன், ஆரியானா ஆகியோரின் அன்புப் பூட்டனும் அமரர் பரமசாமி, இராசரத்தினம், இந்திராணி, அமரர் தவமணி, மல்லிகாதேவி, அமரர் பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நுணாவில் மேற்கு,
மடத்தடிச்சந்தி,
சாவகச்சேரி

தகவல்:
குடும்பத்தினர்
077 694 9635

(CR 43060) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07.05.2025 புதன்கிழமை

# யாழ்.மாநகரசபையின் ஆட்சி யார் கையில்?

யாழ்ப்பாணம், மே 7

**யாழ்.மாநகரசபையில் பெரும்பான்மைப் பலம் எந்தவொரு கட்சிக்கும் கிடைக்கவில்லை என்பதால், எந்தக் கட்சி ஆட்சியமைக்கும் என்ற குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. 45 ஆசனங்களைக் கொண்ட யாழ்.மாநகரசபையில் தமிழரசுக் கட்சி 13 ஆசனங்களையும், தமிழ்த்தேசியப் பேரவை 12 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 10 ஆசனங்களையும் பெற்றுள்ளன.**

ஆனால் 23 ஆசனங்களைத் தனியாகப் பெற்றால் மாத்திரமே ஆட்சியமைக்கும் பெரும்பான்மைப் பலத்தை கட்சியொன்று பெற்றுக் கொள்ளமுடியும். எனினும் அந்தளவு ஆசனங்களை எந்தவொரு கட்சியும் பெறாமையால் வேறு கட்சிகளோடு கூட்டணி அமைத்தே யாழ்.மாநகரசபையில் ஆட்சியமைக்கவேண்டிய இக்கட்டான நிலை தமிழரசுக் கட்சிக்கும், தமிழ்த் தேசியப் பேரவைக்கும் , தேசிய மக்கள் சக்திக்கும் ஏற்பட்டுள்ளன. இந்த மூன்று கட்சிகளில் தமிழ்த் தேசியப் பேரவையும், தேசிய மக்கள் சக்தியும் பிற கட்சிகளோடு கூட்டணி வைக்கமாட்டோம் என ஏற்கனவே அறிவித்திருந்தன. இதனால் தமிழரசுக்கட்சி ஏனைய கட்சிகளோடு கூட்டணி அமைப்பதன் மூலம் ஆட்சியைப் பிடிக்கும் நிலை தோன்றியுள்ளது. எனினும் பாதீட்டின் போது அதனை தமிழ்த் தேசியப் பேரவை, தேசிய மக்கள் சக்தி என்பன எதிர்த்து வாக்களித்தால் தமிழரசுக் கட்சியின் ஆட்சியும் பறிபோகும் நிலையுண்டு. எனவே தமிழ்த்தேசியக் கட்சிகள் அனைத்தும் இணைந்து ஒரு கூட்டாக யாழ். மாநகரசபையில் ஆட்சியமைப்பதன் மூலமே இந்தக் குழப்பத்துக்கு முடிவு கட்டலாம் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

(அ. 26, சி)




**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை உறவினர்கள் வருகையால் அதிக படியான செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** தந்தைவழி உறவினர்களால் காரிய அனுகூலமாகும். கணவன் மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் நல்லபடி ஒத்துழைப்புத் தருவார்கள்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாகமுடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். மாலையில் பிள்ளைகளுடன் கலந்துபேசி முக்கிய முடிவு ஒன்று எடுப்பீர்கள்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். மாலையில் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் தொடர்புகொண்டு பேசுவது மகிழ்ச்சி தரும். பிற்பகலுக்கு மேல் உற்சாகமாக இருப்பீர்கள்.

**துலாம்:** குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகரமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள். பிற்பகலுக்கு மேல் மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாகத் திட்டமிட்டுக்கொண்டு கவனமாகச் செல்லவும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறி, உங்கள் அறிவுரைப்படி செயற்படுவார்கள். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத் துணை நீங்கள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள்.

## முன்னாள் ஜனாதிபதி ரணில் நாளை இந்தியா பயணம்!

கொழும்பு, மே 8

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள்கள் பயணமாக நாளை இந்தியாவுக்குச் செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு செப்டெம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்வது இது நான்காவது சந்தர்ப்பமாகும்.

இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தில் பெங்களூரில், தி இந்து செய்தித்தாளின் ஐந்தாவது பதிப்பு தொடர்பாக நடைபெறும் விழாவில், சிறப்புரையாற்ற ரணில் விக்ரமசிங்க அழைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். இரண்டு நாள்கள் நடைபெறும் இந்த நிகழ்வில் அரசியல், வணிகம், கல்வி, விளையாட்டு மற்றும் கலைத் துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


## உக்ரைன் போர் முடிவுக்கு வரும்

### ட்ரம்ப் நம்பிக்கை

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான போரை விரைவில் முடிவுக்குக் கொண்டுவருவேன் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உக்ரைனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். இரு நாடுகளுக்கும் இடையிலான இணக்கப்பாட்டில் தற்போது ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கருதுகின்றேன். போரை நிறுத்துவதற்காக எமது அதிகாரிகள் தொடர்ந்து கடுமையாக முயற்சித்து வருகின்றார்கள் -என்றார். (ம)



# பாப்பரசரைத் தெரிவுசெய்யும் கர்தினால்கள் மாநாடு இன்று!

கத்தோலிக்க திருச்சபைக்குப் புதிய திருத்தந்தையைத் தெரிவு செய்யும் கர்தினால்கள் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன என்று வத்திக்கான் அறிவித்துள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸின் மறைவின் பின்னர், புதிய திருத்தந்தையைத் தெரிவு செய்வதற்காக 133 கர்தினால்கள் வாக்களிக்கும் மாநாடு இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் கர்தினால்கள் வெளியுலகத் தொடர்பில் இருந்து முற்றாகத் துண்டிக்கப்படுவது மரபாகக் காணப்படுகின்றது.


புதிய திருத்தந்தையைத் தெரிவு செய்தால், அது தொடர்பான அறிவிப்பு, பிரத்தியேக புகைபோக்கி வழியாகவே முதன்முதலில் உலகுக்கு அறிவிக்கப்படும். இந்தப் பிரத்தியேக புகைபோக்கி நேற்றையதினம் நிறுவப்பட்டுள்ளது. அத்துடன், கர்தினால்களின் மாநாடு நடைபெறவுள்ள பகுதியில் தொலைபேசி சிக்னல்கள் கிடைக்காதவாறு ஜாமர்களும் அமைக்கப்பட்டுள்ளன.

புதிய கர்தினாலைத் தெரிவுசெய்வதற்கான இறையாசீர் கோரும் வழிபாடுகள், இன்றுடன் தொடர்ச்சியாக ஐந்தாவது நாளாக வத்திக்கானில் இடம்பெற்றுள்ளன. கர்தினால்களின் இன்றைய மாநாடு தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. சிலவேளையில் பாப்பரசரைத் தெரிவு செய்வதற்காக வாரங்கள்கூட ஆகலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குசாவடிக்கு முன்பாக வாள்களுடன் நின்றவர்கள் கைது

கிளிநொச்சி, மே 7
கிளிநொச்சி செல்வா நகர்ப்பகுதியில் வாக்களிப்பு நிலையத்துக்கு அருகே வாள்களுடன் நின்ற இரண்டு இளைஞர்களை பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர். கார் ஒன்றில் வாக்குச்சாவடிக்கு முன்னால் சந்தேகத்துக்குரிய வகையில் நின்ற கார் ஒன்றை பொலிஸார் சோதனையிட்டபோது அதனுள் வாள் ஒன்றும் கத்தி ஒன்றும் கைப்பற்றப்பட்டது.



அதனையடுத்து காரில் வந்த இரண்டு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டதோடு, காரும் பொலிஸ் நிலையம் எடுத்துச் செல்லப்பட்டது. மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-214,113,27)

**வவுனியாவில்**

## வாக்குச்சாவடிகளுக்கு முன் பரப்புரையில் வேட்பாளர்கள்!

வவுனியா,மே 7
உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்ற நிலையில் வவுனியாவில் வாக்களிப்பு நிலையங்களுக்கு முன்பாக வேட்பாளர்கள் பரப்புரைமில் ஈடுபட்டனர் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். வாக்களிப்பு நிலையங்களின் முன்பாக பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் ஒன்றுகூடி தங்களுக்கு வாக்களிக்குமாறு தெரிவித்துள்ளனர். குறிப்பாக தெற்கு தமிழ்ப் பிரதேசசபைக்குட்பட்ட பல வட்டாரங்களில் இவ்வாறு பரப்புரைகளில் வேட்பாளர்கள் ஈடுபட்டனர் என்றும் கூறப்படுகின்றது. (ச-33-110)

## நாடு முழுதும்....

கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாநகரசபைகள் உட்பட 339 உள்ளூராட்சி சபைகளுக்குரிய தேர்தல் நேற்று நடைபெற்றது. அந்தந்த வாக்களிப்பு நிலையங்களில் வைத்தே வாக்குகள் எண்ணப்பட்டு அறிவிக்கப்பட்டன. நேற்று இரவுவரை வெளியான தகவல்களின் அடிப்படையிலேயே, வடக்குக் கிழக்கில் தமிழரசுக் கட்சி பெருவாரியான இடங்களைக் கைப்பற்றியுள்ளது. அத்தோடு தமிழ்த் தேசியப் பேரவை உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளும் கணிசமான இடங்களைக் கைப்பற்றியுள்ளன. வடக்கு - கிழக்குத் தவிர்ந்த நாட்டின் இதர பகுதிகளில் தேசிய மக்கள் சக்தி முன்னிலையில் உள்ளது. எனினும் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றோடு ஒப்பிடும்போது, இம்முறை தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கி சடுதியாகக் குறைவடைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பல இடங்களில் தேசிய மக்கள் சக்தி முன்னிலையில் உள்ள போதிலும், ஐக்கிய மக்கள் சக்தியும், பெரமுனவும் இணைந்து ஆட்சியமைக்கும் பட்சத்தில் தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியில் அமரவேண்டிய நிலையயே ஏற்பட்டுள்ளது.
கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தமிழரசுக் கட்சி வரலாறு காணாத வெற்றியைப் பெற்றுள்ளது . அதேநேரம், வவுனியா நகரசபைத் தேர்தலில் தனது நேரடிப் பிரதிநித்துவத்தை தமிழரசுக் கட்சி முற்றாக இழந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ, ம-26, 125, 110, 18, )

## கிளிநொச்சி...

ஆகியவற்றில் தமிழரசுக் கட்சி அமோக வெற்றியைப் பதிவுசெய்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் 40 தொகுதிகளில் 36 தொகுதிகளைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது. (அ.ம-26)

## வவுனியா....

மாநகரசபையில், தேசிய மக்கள் சக்தி 4 தொகுதிகளையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 3 தொகுதிகளையும், இலங்கைத் தொழிலாளர் கட்சி 2 தொகுதிகளையும், சுயேச்சை ஒரு தொகுதியையும் கைப்பற்றியுள்ளன.
இதேவேளை மாநகரசபையில் கடந்த முறை 6 வட்டாரங்களில் வெற்றிபெற்ற தமிழரசுக்கட்சி இம்முறை ஒரு வட்டாரத்தில்கூட வெற்றிபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ.ம-110)

## மாகாணசபை...

வித்ததாவது:
உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிச்சயம் வெல்லும். மக்கள் அதற்குரிய ஆணையை மீண்டும் வழங்குவார்கள் என உறுதியாக நம்புகின்றோம். அதேபோல பல வருடங்களாக நடத்தப்படாமல் உள்ள மாகாணசபைத் தேர்தலையும் முடிந்த ளவு விரைவில் நடத்த எதிர்பார்க்கின்றோம்.
அதேவேளை, டிசெம்பரில் ஜனாதிபதியின் பதவியைக் கைப்பற்றப்போவதாகக் கூறிக்கொள்ளும் எதிர்க்கட்சியினரை, அரசியலமைப்புத் தொடர்பில் தெளிவடையுமாறு கோருகின்றேன். எம்மைப் பொறுத்தவரையில் எமக்கு எதிர்க்கட்சியினரின் கருத்துகள் முக்கியமல்ல. நாட்டு மக்களின் கருத்து களே பிரதானம் - என்றார். (அ-ம-44)

## தமிழரசு...

ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளில் பெரும்பாலான சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னிலையில் உள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பின்ன டைவுக்குப் பிறகு மீண்டும் மக்களது ஆதரவைத் தமிழ்க் கட்சிகள் பெற்றுக் கொண்டதில் பெருமிதம் கொள்கின்றேன். அதேவேளையில் நாம் எமது மக்களது நம்பிக்கை வீண் போகாமல் காத்திரமாக சேவை செய்வோம் என்றும் உறுதியளிக்கிறோம் - என்றார். (அ-ம-26)

## ஜே.வி.பி.யை...

னர் என்று தமிழ்த் தேசியப் பேரவையின் வல்வெட்டித்துறை நகரசபையின் முதன்மை வேட்பாளர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார். வல்வெட்டித்துறை நகரசபையின் 9 வட்டாரங்களில் 7 வட்டாரங்களில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியப் பேரவை வெற்றிபெற்றுள்ளது. இதுதொடர்பில் வினாவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:-
இந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் தெளிவான செய்தியை சொல்லியிருக்கிறார்கள். பெருவாரியான வாக்குகளை தமிழ்க் கட்சிகளுக்கு வழங்கியிருக்கிறார்கள். எந்தவொரு வட்டாரத்திலும் அரசாங்கக் கட்சி நேரடியாக வெற்றிபெறவில்லை.
மக்களின் வாக்களிப்பு சதவீதம் குறைவாகக் காணப்படுவதால் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் விகிதாசாரப் பிரதிநித்துவம் ஊடாக வருகிறார்கள். மக்கள் உறங்கியிருக்காமல் விழிப்புடன் உள்ளனர், இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து போராடுவதற்கு அழுத்தங்களை பிரயோகிக்கவேண்டும்.
இந்த வெற்றியை எங்களை நாங்களே ஆள்வதற்காக மக்கள் எமக்குத் தந்த ஆணையாகவே பார்க்கின்றேன். எங்களுடைய பயணம் தொடரும். வெறுமனே சபைகளில் ஆட்சியமைப்பதற்காக மாத்திரமல்லாது இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் பொது உடன்பாட்டுக்கு வரும் வகையில் ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தோடும் இணைந்து செயற்படுவோம் என்றார். (அ-ம-26)

## பற்றைக்...

கப்பட்டுள்ளார்.
அல்வாய் வடமத்திய பகுதியைச் சேர்ந்த, பாஸ்கரன் பரந்தாமன் (வயது 25) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.
வல்லாவத்தை, சத்திரத்தைப் பகுதியில் உள்ள பற்றைக்குள் இளைஞர் ஒருவரின் சடலம் காணப்படுகின்றது என்று பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமையவே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் சடலத்தைப்பார்வையிட்டார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-100)

## உள்ளூராட்சித்...

யாழ்ப்பாணம், மே 7
உள்ளூராட்சித் தேர்தலில் , தேசிய ரீதியிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மிகவும் மந்தமான வாக்களிப்பே இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி, வடமாகாணத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாணத்தில் 56.56 சதவீத வாக்குப் பதிவும், வவுனியாவில் 59.56 சதவீத வாக்குப்பதிவும், கிளிநொச்சி மாவட்டத்தில் 61 வீதமான வாக்குப் பதிவும், மன்னார் மாவட்டத்தில் 70.15 வீதமான வாக்குப் பதிவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 60 வீதமான வாக்களிப்பும் பதிவாகியுள்ளன.
இதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் 50 சதவீத வாக்குப் பதிவுகளும், பதுளை மாவட்டத்தில் 60 சதவீத வாக்குப் பதிவுகளும், பொலனறுவை மாவட்டத்தில் 64 சதவீத வாக்குப் பதிவுகளும், நுவரெலியா மாவட்டத்தில் 60 சதவீத வாக்குப் பதிவுகளும், களுத்துறை மாவட்டத்தில் 61 சத வீத வாக்குப் பதிவுகளும், அநுராதபுரம் மாவட்டத்தில் 60 சதவீத வாக்குப் பதிவுகளும்,மொனராகலை மாவட்டத்தில் 61 சதவீத வாக்குப் பதிவுகளும், கேகாலை மாவட்டத்தில் 58 சதவீத வாக்குப் பதிவுகளும், காலி மாவட்டத்தில் 63 சத வீத வாக்குப் பதிவுகளும், திகாமடுல்ல மாவட்டத்தில் 63 சதவீத வாக்குப் பதிவுகளும், புத்தளம் மாவட்டத்தில் 55 சதவீத வாக்குப் பதிவுகளும், திருகோணமலை மாவட்டத்தில் 67 சதவீத வாக்குப் பதிவுகளும், மாத்தறை மாவட்டத்தில் 58 சதவீத வாக்குப் பதிவுகளும், மாத்தளை மாவட்டத்தில் 62 சதவீத வாக்குப் பதிவுகளும், இரத்தினபுரி மாவட்டத்தில் 60 சதவீத வாக்குப் பதிவுகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 61 சதவீத வாக்குப் பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. (அ.ம-56-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாக்களித்தார் ஜனாதிபதி

கொழும்பு, மே 7
உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது வாக்கை பதிவுசெய்தார்.
கொழும்பு பஞ்சிகாவத்த அபே சுந்தராமய விகாரையில் அவர் தனது வாக்கைச் செலுத்தினார்.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வியட்நாமுக்கான மூன்று நாள் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று செவ்வாய்கிழமை மதியம் 01.25 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## மும்பையைத் தோற்கடித்து முதலிடத்தில் குஜராத்!



**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், மும்மையைத் தோற்கடித்து புள்ளிப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது குஜராத்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக வில்ஜாக்ஸ் 53 ஓட்டங்களையும், சூரியகுமார் யாதவ் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் சாய் கிஷோர் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.
மழை குறுக்கிட்ட காரணத்தால், குஜராத் அணிக்கு 19 ஓவர்களில் 147 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டன. கடைசிப் பந்தில் இலக்கை எட்டி வெற்றிபெற்றது குஜராத். இந்த வெற்றியின் மூலம் புள்ளிப்பட்டியலில் முதலாவது இடத்துக்கு குஜராத் முன்னேறியது. (ம)

## வர்த்தகத் தொழிற்றுறை மன்றத்தின் 18 ஆவது பொதுச்சபைக் கூட்டம்


யாழ்ப்பாணம், மே 7
யாழ். வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் 18 ஆவது பொதுச்சபைக் கூட்டம் செயலாளர் தலைமையில் கடந்த சனிக் கிழமை இடம்பெற்றது.
கூட்டத்தில் கடந்த ஆண்டுக்கான செயற்றிட்ட அறிக்கைகள் மற்றும் நிதி அறிக்கைகள் அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2025 - 2026 ஆம் ஆண்டுக்கான இயக்குநர்சபைத் தெரிவும் இடம்பெற்றது. புதிய தலைவராக கு. வசீகரன், உப தலைவராக கலாநிதி செ. திருமாறன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச-25,66)

## நீர்வேலியில் திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், மே 7
நீர்வேலிப் பிரதேசத்தில் திருடர்களின் கைவரிசை அதிகரித்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.
நீர்வேலிக் கந்தசுவாமி ஆலய சுற்றாடல் பகுதியில் கடந்த வாரத்தில் இந்தத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.
ஆலயத் திருவிழாவுக்குப் பக்தர்கள் செல்லும் தருணத்தில் திருடர்கள் வீடுகளுக்குள் நுழைந்து பெறுமதியான பொருள்களைத் திருடிச்செல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-17)

# வேட்பாளர்கள் 55 பேர் கைது

கொழும்பு, மே 7
2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை மார்ச்மாதம் 03 ஆம் திகதி முதல் மே மாதம் 6 ஆம் திகதி 604 முறைப்பாடுகள் கிடைத்துள் ளதுடன் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 55 வேட்பாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 476 முறைப்பாடுகளும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 128 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. தேர்தல் நடவடிக்கைகளுக்காகச் சட்ட



விரோதமாகப் பயன்படுத்தப்பட்ட 47 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

**வேலையாட்கள் தேவை**
வெல்டிங் வேலை அனுபவம் உள்ளவர்கள் தேவை.
தொடர்பு: 076 660 1600

**காணி விற்பனைக்கு**
நாவற்குழி 55 பரப்பு, 7 1/2 அராலிதுறை 200 பரப்பு வாடகைக்கு கடையும், வீடும் யாழ் நகரில் உண்டு.
தொடர்புகளுக்கு
077 665 9736, 076 071 2676, 077 662 6117

## ஆண்டுவிழா கலைநிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 7
அரியாலை காந்தி சனசமூக நிலையத்தின் 76ஆவது ஆண்டுவிழா கலை நிகழ்வுகள் கடந்த மாதம் 20ஆம் திகதி நடைபெற்றன.
நிகழ்வில் "சித்திரையில் சிறந்த பாடல்கள்" எனும் போட்டியில் அரியாலை வடமேற்கு மூத்த பிரஜைகள் நலன் புரிச்சங்க உறுப்பினரான அ.சிறிஸ்கந்தராசா, 31 இளம் பாடகர்களை பின்தள்ளி முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். (41)

# நல்லை ஆதீனத்தின் நினைவுப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், மே 7
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் ஏற்பாட்டில், மறைந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் நினைவுப் பிரார்த்தனை வைபவமும் அஸ்தி பிரதிஷ்டையும் நல்லை ஆதீன மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.
அன்றையதினம் மதியம் 12 மணிக்கு அன்னதானமும் வழங்கப்படும் என ஆதீன ஆளுநர் சபை அறிவித்துள்ளது. (ச-25)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டதாரிக் கற்கைகள் பீடத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல்**
நேரம் : 2025.05.11 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.00 மணி
இடம் : பட்டதாரிக் கற்கைகள் பீடம்
பட்டதாரிக் கற்கைகள் பீடத்தில் உயர்பட்டக் கற்கைகளை நிறைவு செய்த அனைத்துப் பழைய மாணவர்களையும் மேற்படி கலந்துரையாடலில் கலந்து தங்களது காத்திரமான ஆலோசனைகளை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
பழைய மாணவர் சங்கம்
பட்டதாரிக் கற்கைகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

# வாக்குச்சாவடிக்கு கோடரியுடன் பழங்குடியினர் செல்ல அனுமதி



கொழும்பு, மே 7
தேர்தல் ஆணையகம் முதன்முறையாக, பழங்குடியின மக்கள் வாக்குச்சாவடிக்கு கோடரிகளை எடுத்துச்செல்ல அனுமதித்துள்ளது. பழங்குடி மக்களின் நீண்டகால கோரிக்கையைத் தொடர்ந்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
கோடரியை தோழில் ஏந்திச் செல்வது பழங்குடி நாட்டுப்புற பாரம்பரியத்தின் அடிப்படை அங்கமாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

**காணி விற்பனைக்கு**
திருநெல்வேலியில் ஆடியபாதம் வீதியில் இருந்து 200m தூரத்தில் முருகன் வீதியில் 2 1/4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
நான்கு பக்கமும் மதில் அமையப்பெற்று மின்சார இணைப்பும், குழாய் கிணற்று வசதியும் உள்ளது.
தொடர்புகளுக்கு:
076 081 4729



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புதன் பொய்கை
07.05.2025
புதன்கிழமை

அவநம்பிக்கை பலவீனத்திற்கு வழிவகுக்கிறது; நம்பிக்கை ஆற்றலுக்கு வழிவகுக்கிறது.

- வில்லியம் ஜேம்ஸ்

# மலையகத்தில் முடங்கிவரும் கல்வி



கருணாகரன் நிலானி
ஊடகக் கற்கைத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

இன்றைய காலகட்டத்தில் மாணவர்களுக்கான கல்வியை அணுகுவதில் அதிகமான வசதிவாய்ப்புகள் காணப்படுகின்றன. காலணி, சீருடை மற்றும் படிப்புத் தேவைகளுக்காக வசதிகள் என்று அரசாங்கம் பல சலுகைகளை வழங்குகின்றது. ஆயினும் பொதுவாக மலையகப் பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்கள் கல்வியைத் தொடராமல் பாடசாலை இடைநிற்றலையே மேற்கொண்டுவருகின்றனர்.

மலையகத்தில் தற்போதும் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் இடையே கல்வி பற்றிய அடிப்படை விழிப்புணர்வு இல்லாமலே இருக்கின்றது. இதுவே ஒருவகையில் மாணவர்களின் இடைநிற்றலுக்குக் காரணமாக அமைகின்றது. அதிகமான பெற்றோர் கல்வி என்றால் என்ன? தமது பிள்ளைகளுக்கு கல்வி ஏன் அவசியம்? கல்வியினால் பெறும் பயன் என்ன? போன்றவை தொடர்பான அடிப்படை அறிவு இல்லாமையால் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளில் அக்கறை இன்றி செயல்படுகின்றனர். இவ்வாறு செயற்படும் தன்மை இடைநிற்றலை அதிகரிப்பதில் செல்வாக்குச் செலுத்துகிறது. மேலும் பெற்றோர் மத்தியில் காணப்படும் வறுமை ஒரு வகையில் தாக்கமளிப்பதாக அமைகின்றது. இதனால் பிள்ளைகளுக்கான தேவைகளை ஈடுசெய்ய முடியாத தன்மையையும் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக தாய் மற்றும் தந்தை தோட்டத் தொழிலாளியாக இருப்பின், ஒரு வீட்டில் 4 பிள்ளைகள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக இருந்தால் அவர்களுக்கான பாடசாலை கற்றல் உபகரணங்களை வாங்கிக் கொடுப்பதில் பெற்றோர் பெரும் சிரமங்களை சந்திக்கின்றனர். மாதாந்தம் பெறும் சிறு தொகையைக் கொண்டு மூன்றுவேளை உணவு வழங்குவதற்கு கஷ்டப்படும் நிலையில், பெற்றோர்களுக்கு பிள்ளையின் கல்வி நடவடிக்கை என்பது பெரும் பாரமாகவே அமைகிறது. அதேபோன்று அதிகரித்து வரும் சமூக ஊடகங்களின் தாக்கம் மாணவர்களின் கல்வியை பாதிக்கின்றது.

அதிகளவான பேஸ்புக் பயன்பாடு, ரிக்ரொக் செயலியின் பயன்பாடு, பொருத்தமற்ற முறையிலான இணையதளப் பயன்பாடு, நிகழ்நிலை விளையாட்டுகள் என்பவற்றில் அதிக ஆர்வத்தைக் காட்டும் மாணவர்கள் படிப்பை அலட்சியப்படுத்தி விடுகின்றனர். மேலும் மலையகப் பகுதியில் தாய்மார்கள் அதிகமாக வீட்டுப் பணிப்பெண்ணாக வெளிநாடுகள் செல்வதால், வீட்டில் பிள்ளைகளை சரியான முறையில் வளர்க்க எவரும் இல்லாத நிலை உருவாகின்றது. அச்சந்தர்ப்பத்தில் அந்தக் குடும்பத்திலுள்ள மூத்த சகோதரன் அல்லது சகோதரியின் தலையில் குடும்பப்பொறுப்பு சுமத்தப்படுகிறது. இதனால் அவர்கள் பாடசாலை வாழ்க்கையை அங்கேயே முடித்துக்கொள்கின்றனர். மேலும் அங்குள்ள மக்களின் குடியிருப்புகள் மலைப்பாங்கான பிரதேசங்களில் அமைந்துள்ளதால், போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைவு. இதனால் மாணவர்கள் உரிய நேரத்துக்கு பாடசாலைக்கு வருவதிலும், பாதுகாப்பு சார்ந்த விடயங்களிலும் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதால் பாடசாலை இடைநிறுத்தத் தீர்மானத்தை எடுக்கின்றனர். அத்துடன் பாடசாலை மாணவர்கள் மத்தியில் குறிப்பாக இவ்வாறு இடைநிற்றலுக்கு உட்படும் மாணவர்களிடையே இளவயது திருமணம் என்பது மலையகத்தில் அதிகரித்துவரும் ஒன்றாகவே காணப்படுகின்றது.

**மலையகப் பகுதியில் தாய்மார்கள் அதிகமாக வீட்டுப் பணிப்பெண்ணாக வெளிநாடுகள் செல்வதால், வீட்டில் பிள்ளைகளை சரியான முறையில் வளர்க்க எவரும் இல்லாத நிலை உருவாகின்றது. அச்சந்தர்ப்பத்தில் அந்தக் குடும்பத்திலுள்ள மூத்த சகோதரன் அல்லது சகோதரியின் தலையில் குடும்பப்பொறுப்பு சுமத்தப்படுகிறது. இதனால் அவர்கள் பாடசாலை வாழ்க்கையை அங்கேயே முடித்துக்கொள்கின்றனர்.**



இவ்வாறான நிலைகளைத் தவிர்த்து கல்வி ரீதியாக மலையகத்தை மீண்டும் கட்டியெழுப்பவேண்டிய தேவை நம் அனைவரிடமும் காணப்படுகிறது. இதற்காக மாணவர்களிடையே கல்வியைப் பாதிக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்ப்பதன் மூலமாகவும், சரியான வீடமைப்பு வசதிகள், பாதைப் புனரமைப்பு, போக்குவரத்து சார் பிரச்சினைகள் என்பவற்றை இனங்கண்டு தீர்ப்பதன் மூலமும் மாணவர் இடைநிற்றலைக் குறைக்கலாம். மேலும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு அப்பால், இடைநிற்றலுக்கு உட்படும் மாணவர்களை சட்டரீதியாக அணுகி நடவடிக்கை எடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் வளமான மலையகமொன்றை உருவாக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரன் சுந்தரின் கேலிச்சித்திரங்களின் காட்சி



ஸ்ரீ கிருபாகரன் டிசானி
பஞ்சலிங்கம் லஜீபன்
*நுண்கலைத்துறை,*
*கலைவரலாறு சிறப்புக்கலை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறை மாணவர் அமைப்பாகிய கலைவட்டத்தின் ஏற்பாட்டில் நுண்கலைத்துறையின் விடுகை வருட மாணவர்களாகிய கி. டிசானி, ப. லஜீபன் ஆகிய இருவரது எடுத்தாளுகையில் "சமூகக் கட்டமைப்பும் கட்டுடைப்பும் : சிரித்திரன் சுந்தரின் கேலிச்சித்திரங்களின் காட்சி" எனும் தலைப்பின் கீழ் கேலிச்சித்திரப் படைப்பாளியான சிவஞானசுந்தரம் (சிரித்திரன் சுந்தர்) என்பவரின் படைப்புகளின் காட்சிப்படுத்தலானது ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இக் காட்சியிடலானது யாழ். பல்கலைக்கழக கலைக்கூடத்தில் நாளை 8 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதி வரை நடைபெறும். 12 ஆம் 13 ஆம் திகதிகளான விடுமுறை தினங்களில் காட்சிக்கூடம் மூடப்பட்டும் ஏனைய நாள்களில் பார்வையாளர்களுக்காகத் திறந்திருக்கும்.

கருத்தோவியம் அல்லது கேலிச்சித்திரம் என்பது நகைச்சுவையைத் தூண்டும் வண்ணம் வரையப்படுவதாகும். வசனங்களால் எழுதி உணர்த்தமுடியாத கருத்துகளை கருத்துப் படங்கள் எளிதாக உணர்த்துகின்றன. சமுதாயம், சமயம், அரசியல், பொருளாதாரத் துறைகளிலுள்ள குறைகளை நகைச்சுவையுடன் உணர்த்தும்படி கேலிச்சித்திரங்கள் அமைகின்றன. கேலிச்சித்திரம் என்பது ஒரு பாத்திரம், அதன் பிரதான பண்புகள் மிகைப்படுத்தப்பட்டவையாக இருக்கும். இந்த அதீத மிகைப்படுத்தல் அந்தப் பாத்திரத்தை வாசகருக்கு கேலிக்கைக்குரியதாக தோற்றுகின்றது. கேலிச்சித்திரங்கள் 16 ஆம் மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளில் பிரபலமடைந்தன. அவை ஐரோப்பிய அரசியல்வாதிகளை கேலி செய்யும் ஒரு வழிமுறையாகப் பயன்படுத்தப்பட்டன. 19ஆம் நூற்றாண்டில் காலனியவாதிகளால் இலங்கையில் அறிமுகப்படுத்தபட்டது. இலங்கைக் கேலிச்சித்திர படைப்பாக்கத்துறையின் முன்னோடிக் கலைஞர்களுள் ஓப்ரி கொலற், ஜிப்ரி யூனூஸ், டபிள்யூ. ஆர். விஜேசோம, கமிலஸ் பெரேரா, சி.சிவஞானசுந்தரம் (சிரித்திரன் சுந்தர்) ஆகியோர் குறிப்பிடத்தக்க சிலராவர்.

சிரித்திரன் சுந்தர் என அறியப்படும் சிவஞானசுந்தரம் 03.03.1924 இல் யாழ்ப்பாணம் கரவெட்டியில் பிறந்தார். ஓவியர் எஸ்.ஆர். கனகசபையின் உந்தலில் ஓவியம் வரையத் தொடங்கிய இவர் கட்டடக்கலையை பயிலச் சென்று பின் மும்பையிலுள்ள ஜே .ஜே. கலைப் பள்ளியில் சித்திரக்கலைக்கான பயிற்சியைப் பெற்றுக் கொண்டார். அதேசமயம் ராஜா ரவிவர்மாவிடமும் ஓவியக்கலை பயின்றார். இவர் கொஞ்ச், பிளிட்ஸ் ஆகிய ஆங்கிலப் பத்திரிகையிலும் லோக்கசத்த என்ற மராட்டிய பத்திரிகையிலும் தினகரன், வீரகேசரி, மித்திரன், சிரித்திரன்போன்ற தமிழ் சஞ்சிகைகளிலும் கேலிச்சித்திரக் கலைஞராகச் செயற்பட்டார். அவரது கருத்தோவியங்களின் நூல் "சிரித்திரன் சித்திரக்கொத்து" எனும் தலைப்பில் வெளியாகி உள்ளது. மேலும் காலம், சுவைத்திரல் போன்ற சஞ்சிகைகள் இவர் குறித்த சிறப்பு இதழ்களை வெளியிட்டுள்ளன. 1963 இல் சிரித்திரன் சஞ்சிகையை தனது சொந்த இதழாக வெளியிட்டார். 1971ஆம் ஆண்டு நாட்டில் தோன்றிய கலவரங்கள் காரணமாக




சிரித்திரன் இதழ் கொழும்பில் வெளியிடலை நிறுத்தி பின் யாழ்ப்பாணத்தில் வெளியானது. 1987 ஆம் ஆண்டில் இந்திய அமைதிப்படையினருடன் நிகழ்ந்த போரின்போது இடம்பெற்ற சம்பவங்களில் சிரித்திரன் அச்சகத்தின் சொத்துகள், அச்சகப் பொருள்கள் அனைத்தும் சூறையாடப்பட்டன. இதனால் 1987-1990 களின் மார்ச் வரையிலான காலப்பகுதியில் சிரித்திரன் இதழ் வெளியிடப்படவில்லை. அத்துடன் அவரைப் பாரிசவாத நோய் பற்றிக்கொண்டது. வலது கரம் இயங்க மறுத்தநிலையில் இடது கரத்தால் எழுதி மீண்டும் சிரித்திரன் இதழை வெளியிட்டு வந்தார். 1995 ஆம் ஆண்டு மூன்றாம் ஈழப்போரின்போது இடம்பெற்ற வலிகாம இடப்பெயர்வின் போது மீண்டும் கடுமையான நோய்க்கு ஆளானார். 03.03.1996 அன்று அவர் வடமராட்சியில் காலமானார்.

சுந்தரின் கேலிச்சித்திரங்கள் பொதுவாக சமூக கட்டமைப்பை விமர்சிக்கும் சிறப்புக்குரியவை. 18 ஆம் நூற்றாண்டின் ஓவியரான வில்லியம் கொகாத் சமூக விமர்சிப்பின் நடுத்தரவர்க்க விழுமியத்தை கேள்விக்குள்ளாக்கல் மற்றும் ஐரோப்பிய பாணியில் இலங்கையின் முதல் ஓவியம் வரைந்த வன் டொட் என்போரது தகவமைப்பு சுந்தரின் கருத்தோவியங்களில் கையாளப்பட்டுள்ளது. இடதுசாரிக் கொள்கை அரசியல் எதிர்ப்பார்ப்பு கால்மார்க்ஸின் மார்க்சிய கொள்கை போன்ற சிந்தனைகள் தனது படைப்பின் பாத்திரங்களான சின்னக்குட்டி, மயில் வாகனத்தார், மைனர் மச்சான் மற்றும் சவாரித் தம்பர், மிஸிஸ் தாமோதரம் ஆகியவற்றில் பொருத்தி சமூக கட்டமைப்பு மக்களிடையே புதைந்துள்ளமையை தனது பார்வையில் விமர்சித்துள்ளார். இதற்காக நகைச்சுவையை ஆயுதமாக ஏந்தி மக்களிடையே புரிதலை ஏற்படுத்த புரட்சி செய்தவர்.

அவர் சுமார் 45 ஆண்டுகளாக இலங்கையில் கேலிச்சித்திரத்துறையில் தனது ஆளுமையைச் செலுத்தியவர். சுந்தரின் நினைவாக இலக்கிய விழா ஒரு முறை கொழும்பு தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்பட்டது. இருப்பினும் அவரது படைப்புகளின் காட்சிப்படுத்தல்கள் குறிப்பிடும்படியாக நிகழாத சூழ்நிலையில், அவரது குறித்த படைப்புகள் பற்றிய கலை வரலாற்றுப்புல ஆய்வு முக்கியமானதாகும். வெறும் நகைப்புக்காக மட்டுமல்லாமல் சிந்தனையைத் தூண்டும் பல ஆக்கங்களை படைத்த பெருமைக்குரியவர். பல்வேறுப்பட்ட படைப்புகளை தன் கைவண்ணத்தால் உருவாக்கி இருப்பினும் அவரது சமூகக் கட்டமைப்பின் கட்டுடைப்பு பார்வையிலான கேலிச் சித்திரங்களை மையப்படுத்தியதாகவே இக் காட்சி அமைகிறது. சமூகக் கட்டுமானமானது மக்களின் யதார்த்த வாழ்வில் பல சிக்கல்களை ஏற்படுத்தி உள்ளன. இவற்றை அவர் கட்டுடைக்கும் செயற்றிட்டமாக வெறுமனே சிரிப்புக்குரியதாக மட்டுமின்றி சிரிப்புடன் சிந்தனையைத் தூண்டுவதாக இவரது படைப்புகளை அடையாளப்படுத்தலாம். சுந்தரின் படைப்புகள் சமூக கட்டுமான விமர்சிப்பினை சமூக, அரசியல், பொருளாதார வகைமாதிரியில் காண்பிய விமர்சனம் செய்வதுடன் நகைச்சுவையில் மக்களை விழிப்படையச் செய்யும் சமூக மேம்பாட்டுக்கான உன்னத வீச்சாகவும் திகழ்கின்றன. அப்படியான இக் காட்சிப்படுத்தலினை இலவசமாக யாவரும் பார்வையிடலாம்.







# 85 ஆம் ஆண்டில் அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம்

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையமானது எமது பிரதேசத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்துவருகின்றது. இந்த சனசமூக நிலையமானது 1940 களில் அமைக்கப்பட்டது. வலிமேற்கு பிரதேச சனசமூக நிலையங்களில் முதற்தர விருதுபெற்று பணிகளை முன்னெடுத்துவருகின்றது.


ஆரம்பத்தில் இந்நிலையமானது சிறிய கட்டடமாகக் காணப்பட்டது. 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது நிலையம் நவசிப்பிள்ளை மடம் என்று அழைக்கப்படுகின்ற ஒரு பழைய சுண்ணாம்புக் கட்டடத்தில் காற்றோட்டமற்ற, வெளிச்ச வசதியற்ற இருளடைந்த சூழலில் இயங்கிவந்தது. அன்றைய காலத்தில் சி.கந்தசாமி தலைமையிலான இளைஞர்கள் குழு பல்வேறுபட்ட தொழில் முயற்சிகளில் ஈடுபடும் பல பெரியார்களினுடைய உதவிகளையும், அன்பளிப்புகளையும் பெற்று ஒரு அறையும் ஒரு விறாந்தையும் கொண்ட சனசமூக நிலையக் கட்டடத்தை அமைத்தனர். இப்புதிய கட்டடம் அக்காலத்தில் கிராம சபைத் தலைவராக இருந்த முதலியார் சின்னத்தம்பியினால் பெருந்தொகையான மக்களின் பங்கபற்றுதலில் கலைநிகழ்வுகளுடன் திறந்துவைக்கப்பட்டது. அன்று யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் தலைவராக இருந்த மானிப்பாயைச் சேர்ந்த கேட் முதலியார், இங்கு சமூகம் தந்து எமது சங்க வளர்ச்சிக்குவேண்டிய நூல்களைப் பங்களிப்புச்செய்தும் எமது சங்கத்தைப் பதிவுசெய்யவும் ஒத்தாசை புரிந்தார். அக்காலத்தின் சங்கத்தின் செயற்பாட்டை திருப்திகரமாக செயற்படுத்தும்வகையில் மாதம் ஒருவர் பாதுகாவலராக நியமிக்கப்பட்டார்.

இச்சனசமூக நிலையம் தற்போதுவரை வருடந்தோறும் ஆண்டுவிழாக்களை முன்னிட்டு பொது அறிவு, ஆங்கிலப்போட்டி, சதுரங்கப்போட்டி என்பவற்றை நடத்தி பரிசில்களை வழங்கிவருகின்றது. அத்துடன் ஸ்ரீ முருகன் பாலர் பாடசாலையினை நடத்திவருகின்றது. இப்பாடசாலையில் தற்போது முப்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இரண்டு ஆசிரியர்களும் பணியாற்றிவருகின்றனர். இவர்களுக்கான கொடுப்பனவும் நிலையத்தினால் வழங்கப்பட்டுவருகின்றது.

வருடந்தோறும் நவராத்திரி விழாக்கள் நடத்தப்படுகின்றது. மேலும் இங்குள்ள இளைஞர்கள் ஆலய சூழலில் சிரமதானம் போன்ற சமயப்பணிகளையும் முன்னெடுத்துவருகின்றனர். இந்நிலையத்தின் பொன்விழா நிலையத்தலைவர் ச.மோகனதாசன் தலைமையில் 1990 ஆம் ஆண்டில் மிகவும் பிரமாண்டமாக இடம்பெற்றது. இதன் போது பொன்விழா மலரைரும் வெளியிடப்பட்டது. வைரவிழாவானது 2000 ஆம் ஆண்டளவில் நிலையத்தலைவர் மு.விஜயேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்காலப்பகுதியில் நிலையத்தில் பாரிய அபிவிருத்திகள் இடம்பெற்றிருந்தன. நிலையத்தின் பவளவிழாவானது நிலையத்தலைவர் ச.மோகனதாசன் தலைமையில் 2015 ஆம் ஆண்டில் மூன்று நாள்கள் கலைநிகழ்வுகளுடன் இடம்பெற்றது. இவ்வாண்டில் நிலையத்திற்கான புதிய நூலகக் கட்டடம் திறந்துவைக்கப்பட்டு நூலகச்செயற்பாடுகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன. இந்நூலகத் திறப்புவிழாவவில் இந்தியத் துணைத்தூதுவர் கலந்துகொண்டார்.

**பால.பகீந்திரன்**
முன்னாள் செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஈழத்து ஆளுமை த.சண்முகசுந்தரத்தின் 'தமிழியல் சுவடுகள்' நூல் வெளியீடு

ஈழத்து எழுத்தாளர் வரிசையில் புகழ்பூத்த எழுத்தாளர்களில் ஒருவரான தமிழருவி த.சண்முகசுந்தரத்தின் நூற்றாண்டு நிறைவுத் தொகுப்பாக "தமிழியல் சுவடுகள்" நூல் வெளியீட்டு விழா தெல்லிப்பழையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் , மல்லாகம் மகாவித்தியாலய ஆசிரியர் பா. பாலமுரளியின் வரவேற்புரையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

வாழ்த்துரையை மாவை ஆதீன முதல்வர் மஹாராஜ ஸ்ரீ.து.ஷ.இரத்தினசபாபதிக்குருக்கள், தலைமையுரையை யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், சிறப்புரையை யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளர் க.விநாயகமூர்த்தி மற்றும் வலிகாமம் கல்வி வலய முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் ஆசிரியர் சி.ரமேஷ் நூலின் வெளியீட்டுரையை ஆற்றியதைத் தொடர்ந்து தமிழருவி சண்முகசுந்தரத்தின் மகன் ச.அருள்முருகன் நூலின் முதற்பிரதியை வெளியிட்டுவைக்க பேராசிரியர் சண்முகலிங்கன் அதைப் பெற்றுக்கொண்டார். யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட சமூகவியல் விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், யாழ். பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை, இந்துக்கற்கைகள்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன் ஆகியோர் நூலின் ஆய்வுரைகளையும் வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் ம.பா.மகாலிங்கசிவம் பதிலுரையையும் ஆற்றினார்கள்.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் கல்வியியலாளர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். தமிழருவி த.சண்முகசுந்தரம் அதிபராகக் கடமையாற்றிய சமயத்தில் அவரால் எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான படைப்புகளைக்கொண்ட நூல்களைத் தொகுத்து சுமார் 1092 பக்கங்களில் அழகாக வடிவமைக்கப்பட்ட இந்தக் கவர்ச்சிகரமான நூல்கள் பாடசாலைகள், நூலகங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் ஏனைய துறைகளுக்கும் வழங்கப்பட்டன.

தமிழருவி த.சண்முகசுந்தரம் ஈழத்தின் தலைசிறந்த மூத்த எழுத்தாளராக விளங்கினார். அவரால் எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான நூல்கள் யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் மத்திய நூலகம் உட்பட இலங்கையின் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. கலை, ஆன்மிகம், நாட்டாரியல், நாவல், நாடகம், கட்டுரை, சிறுகதை போன்றவற்றை உள்ளடக்கியதாக இந்த பெரியளவிலான நூல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்து. ஆக்கங்கள், கலைவரலாறு, சமயவரலாறு, ஆளுமைகள், ஆக்க இலக்கியம் முதலிய தலைப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. கலைவரலாறு பகுதியில் கலை மரபும், இசை மரபும், யாழ்ப்பாணத்து இசைவேளார் வன்னிவள நாட்டின் புதுக்குடியிருப்பு கூத்தும் மரபும், மாவை முருகன் காவற்பாட்டு, மாருதப்புரவல்லி, கப்பற்பாட்டு, கண்ணகி அம்மன் கஞ்சிவார்ப்புற்தண்டற் பாட்டு, குருவிச்சி நாய்ச்சிச் சரிப்பு, நாட்டார் இலக்கியப்பாட்டு, யாழ்ப்பாணத்து மாட்டுவண்டிச்சவாரி ஆகியன தொகுக்கப்பட்டுள்ளன. 1092 பக்கங்களினைக் கொண்ட இந்த நூலை வெளியிட்டுவைப்பதற்கு தமிழருவி சண்முகசுந்தரத்தின் மகன் அருள்முருகன் பெரும் பங்காற்றினார்.




## மானிடனே விழியடா

சகாதேவன் ரஜனிமாலா

மானிடனே விழியடா
மாண்ட புகழ்தனை
மீட்டி எழுந்திடடா
மறவர் செயலினை
மாய்த்துக்கொள்ளடா
போதை நீக்கடா
பேதமை அகற்றடா

மூதாதையர் வளர்த்த
மூத்ததமிழன் நீயடா
மானம் அழித்து
வானம் எட்டிடுவாயா?
இப்படி போனால்
எப்படி வம்சத்தை
வளர்த்து எடுப்பாய்
வளர்ச்சி காண்பாய்
பொறுத்ததுபோதும்
பொங்கி எழடா
பண்பாட்டை வளர்க்க





## நல்லை ஆதீன முதல்வரின் ஞானத்தைப் போதிப்போம்

நல்லை ஆதீன முதல்வரின் அமைதி மற்றும் ஒற்றுமைக்கான ஞானத்தையும், தீவிரப்பற்றையும் என்றும் நினைவிற்கொள்கிறேன் என இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரூ தெரிவித்துள்ளார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கடந்த வியாழக்கிழமை பரிபூரணமடைந்தமை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் மறைவால் மிகவும் வருத்தமடைகிறேன். அவரைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ஐக்கிய நாடுகள் சபையின் சார்பாக ஆதீன முதல்வர் மற்றும் அனைத்துப் பக்தர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழங்குடிகளும் மனிதர்களே

இ. மிதுசன்
*தமிழ் சிறப்புக்கற்கை மாணவன்,*
*கிழக்குப்பல்கலைக்கழகம்*

தனித்தனிக் குழுக்களாக காடுகளிலும், வனாந்தரங்களிலும், மலைப்பிரதேசங்களிலும், பனி படர்ந்த பகுதிகளிலும், தீவுகளிலும், ஒதுக்குப்புறங்களிலும் குழுக்கள் குழுக்களாகத் தனிமைப்படுத்தப்பட்டு ஏனைய மக்களோடு தொடர்புகளின்றி தமக்கே உரித்தான தாம் வாழும் பிரதேசத்திற்கிசைவான சமூக, பொருளாதார, பண்பாட்டு விழுமியங்களை உள்வாங்கி ஒரு தொகுப்பினர் வாழ்ந்துவந்தனர். இவர்களைப் பிரித்தானியர்கள், மொழியியலாளர்கள், சமூகவியலாளர்கள் போன்றோர்கள் பழங்குடியினர் என்று கூறுகின்றார்கள்.

இவர்கள் தமக்குள்ளே ஒத்த மொழி பேசுகின்ற ஒரு சிறிய அமைப்புடைய குழுவாகக் காணப்பட்டனர். இலங்கையில் இயக்கர், நாகர் என்ற இரு பிரிவினர்கள் வாழ்ந்துள்ளனர். இலங்கையின் மத்தியிலும் தெற்கிலும் வசித்துவந்த இயக்கர்கள் ஆரம்பகாலத்தில் ஆரியர் வருவதற்கு முன்பே இமயமலையின் ஊடாக வந்தடைந்தனர். இயக்கர்கள் இலங்கையில் தாமிரபரணி எங்கும் பரவி வாழ்ந்தனர். அதாவது அருவியாற்றுக்கும் மகாவலிகங்கைக்கும் தெற்கே இவர்கள் குடியிருப்புகளை அமைத்து வாழ்ந்தனர். நாகர் இலங்கை முழுவதும் பரவியிருந்தனர். இவர்கள் வடக்கில் தென் மேற்குப்பகுதி வரையும் பரந்து வாழ்ந்தனர். மேலும் இவர்கள் பௌத்தத்தைத் தழுவியதுடன் பண்பாட்டுடைய கலாசாரத்தையும் பேணினார்கள். வேடர், ரோடியா, கின்னரயா, குறவர் முதலான பழங்குடி இனத்தவர் இலங்கையில் இருந்தார்கள். அனுராதபுர மாவட்டம், பொலநறுவை மாவட்டம், கும்பக்கரை ஓயா, மத்திய மலைப்பகுதிகள், இலங்கை மேற்குப்புற சமவெளிகளிகள் என்பன வேடர்களின் வாழ்வியல் இடங்களாக இருந்தன.

இலங்கையின் பழங்குடியினர்களான குறவர்களை வனக்குறவர், நரிக்குறவர், குறி சொல்லும் குறவர் என மூன்று வகை குழுக்களைச் சேர்ந்தவர்களாகப் பிரிக்கமுடியும். இவர்கள் பொருளாதார, சமூக பண்பாட்டுக் கோலங்களில் கணிசமான அளவில் ஒத்த பண்புகளைக் கொண்டிருந்தார்கள். இருப்பினும் வேறுபாட்டுத்தன்மையும் காணப்படுகின்றது. அந்தவகையில் குறவர்களில் 90% இற்கு மேற்பட்டவர்கள் சமூகத்தில் தங்களை வனக்குறவர் என்று கூறிக்கொள்கின்றனர். நரிக்குறவர்கள் பேசும் மொழிக்கும் வனக்குறவர்கள் பேசும் மொழிக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்பட்டன. வனக்குறவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆரம்பகால கணக்கீட்டின்படி 5500 எனக் கூறப்பட்டது. இவர்கள் வடமத்திய மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் அனுராதபுரம், பொலநறுவை, அக்கரைப்பற்று, திருக்கோயில், ஹிங்குரான போன்ற இடங்களிலும் வாழ்ந்தனர். யுத்த காலங்களில் இவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்த நிலையில், காடுகளில் வாழ்வதைத் தவிர்த்து ஏனைய சமூகங்கள் வாழும் இடங்களைச் சார்ந்து குடியிருப்புகளை அமைத்து வாழ்ந்து வந்தனர். வேடர்கள் நிரந்தரக் குடியிருப்புகளை கிண்ணியாப் பிரதேசத்தில் அமைத்தனர். இலங்கையில் ரோடியர் என்ற பழங்குடியினரும் வாழ்ந்துவந்தனர். இவர்கள் முதலாளித்துவம் எனும் வகையில் அடக்குமுறைக்குட்பட்டவர்களாக விளங்குகின்றார்கள். வயல்களைத் துப்பரவு செய்பவர்களாகவும், மிருகத்தோலைக் கொண்டு கயிறுதிரித்தல், பிணங்களை அடக்கம் செய்பவர்களாகவும் சப்ரஹமுவ மத்திய மேற்கு, வடமேற்கு மற்றும் தென்மேற்கு போன்ற பகுதிகளில் வாழ்ந்துவருபவர்களாகவும் காணப்படுகின்றனர். இருப்பினும் சாதாரண மக்களால் இவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். பழங்குடியினர்களில் கணிசமானோர் நாகரிகமடைந்த சமூகங்களின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுடன் இணைந்து செல்வதற்கு விருப்பம் கொண்டாலும் நாகரிகம் அடைந்த சமூகத்தினர் அவர்களின் விருப்புகளுக்கு முழுமையாக ஆதரவினை வழங்காதுவிடுவதால் அவர்களை பழங்குடிகளாகக் கருதும் நிலை தொடங்கியது.

பழங்குடியினர் புதிய வாழ்வியலுடன் கலந்து செயற்படுவதற்கு பரம்பரையாக் கடைபிடித்துவரும் சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைமைகள் தடையாகவும் அவற்றிலிருந்து விடுபட முடியாதவர்களாகவும் இருந்து ஏனைய சமூகத்தவர்களால் ஓரங்கட்டப்பட்டு இருப்பதனையும் காணமுடிகிறது. இலங்கைப் பழங்குடியினர் நாட்டில் யுத்த நிலை, இனத்திற்கு இடையிலான முரண்பாடுகள், வன்முறைகள் போன்ற காரணங்களினாலும் நாகரிகம் அடைந்த மக்களின் நெருக்கடிகளின் காரணங்களினாலும் காலத்திற்கு காலம் தமது வாழ்விடத்தை மாற்றிக் கொண்டனர். உதாரணமாக அளிகம்பை காஞ்சிரங்குடாவில் வாழ்ந்த குறவர்கள், இராணுவ அடக்குமுறை காரணமாக வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். இதற்குத் தீர்வு காணும் நோக்கின் அடிப்படையில் திருக்கோயிலில் உள்ள கள்ளிந்தீவுக்கடலில் குடிசைகள் அமைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் சிறுசிறு உதவிகளுடன் வாழ்ந்துவந்தனர். அத்துடன் வட மத்திய மாகாணத்தில் அனுராதபுரம், கலாவேவ, தம்புத்தேகம, விஜிதப்புர, பொலநறுவை போன்ற இடங்களில் காடுகளைச் சார்ந்த பிரதேசங்களில் சிறிய குழுக்களாக நாட்டின் ஏனைய பகுதிகளில் நாடோடி வாழ்வின் காரணமாக அங்குமிங்குமாக எண்ணிக்கையில் குறைந்த நிலையில் வாழ்கின்றார்கள்.

இருப்பினும் இவர்கள் தங்களது பாரம்பரிய பண்பாட்டியல்களை தொடர்ந்து கடைபிடித்துவருகின்றனர் என்று கூறப்படுகின்றது. வேடர்கள், பலரது கவனத்திற்கு உட்பட்டவர்களாக விளங்கியதுடன் அறிஞர்களின் ஆய்விற்கும் அரசினது அனுசரணைக்கும் உரியவர்களாக அங்கீகாரம் பெற்று விளங்கினார்கள். ஆனால் குறவர்களின் நிலை அவ்வாறு இருக்கவில்லை. இலங்கையில் வாழ்ந்துவருகின்ற வனக்குறவர்கள் வாழ்வாதாரப் பிரச்சினைகளுடன், காடுகளில் வாழ்ந்த ஏனைய சமூகங்களுடன் தொடர்புகொள்ளாமல், ஏனைய சமூகத்தவர்களால் ஒதுக்கப்பட்டவர்களாக, நாகரிகம் அடையவேண்டும் என்ற சிந்தனையற்றவர்க ளாக வாழ்ந்துவந்தனர். இவர்கள் 1960களுக்கு முன்னர் காடுகளிலும் அதனைச் சார்ந்த வெளிகளிலும் வாழ்ந்து பின்னர் ஏனைய கிராம மக்கள் வாழ்கின்ற பகுதியிலிருந்து தூரமாக வாழவேண்டிய நிலையும் ஏற்பட்டது. இந்தக் காலப்பகுதிகளில் வனக்குறவர் நாடோடி வாழ்க்கையையும், அவலநிலையையும் அனுபவித்தனர். 1960களில் இவர்களது அவலநிலையைப் பார்த்த கிறிஸ்தவ பாதிரியாரான அருட்திரு கொட்பிறீக் அடிகளார் மற்றும் அக்காலப் பகுதியில் பொத்துவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த எம்.கனகரத்தினம் ஆகியோரின் முயற்சியால் வனக்குறவர்களுக்கு புதுவாழ்வு கிடைத்தது.

இலங்கையின் பழங்குடியினர்களில் வேடர்கள் சிங்கள மொழியைப் பேசுபவர்களாகவும் தமிழ் மொழியைப் பேசுபவர்களாகவும் இரு பிரிவினர்களாகவும் விளங்கினார்கள். இதனைத் தொடர்ந்து அண்மைக்கால அரசாங்கங்கள் சிங்களம் பேசுபவர்களுக்குக் கொடுத்த சலுகைகளை தமிழ் பேசும் வேடர்களுக்குக் கொடுக்கவில்லை. அவுஸ்திரேலியா வகையைச் சேர்ந்த வேடர்கள் இலங்கையில் நூறாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்துவந்தனர். இவர்கள் அக்காலங்களில் காடுகளில் பொருள்களைச் சேகரிப்பவர்களாகவும் காலப்போக்கில் விவசாயத்தைத் தமது தொழிலுடன் இணைத்துக்கொண்டவர்களாகவும் காணப்பட்டனர். ஊவா கிழக்கு மத்திய பகுதிகளில் வாழ்ந்துவரும் வேடர் பரம்பரையினர் சிங்களவர்களாகவும் தமிழர்களாகவும் இருந்தனர். அந்நிலையில் சிங்களமொழி பேசும் வேடர்களுக்குப் பல நலன்பேணும் திட்டங்களைச் செய்து தேசிய நீரோட்டத்துடன் படிப்படியாக அவர்கள் இணைக்கப்பட்டார்கள். தமிழ் பேசும் வேடர் கிழக்கு மாகாணத்தில் ஆங்காங்கே சிறிதளவில் வாழ்கின்றனர். உதாரணமாக கிண்ணியாப் பிரதேசத்தில் குடில்களை அமைத்து நாடோடிகளாகவின்றி விவசாயத்தினை மேற்கொண்டார்கள்.

இலங்கையின் ஆதிக்குடிகளான பழங்குடியினரின் வாழ்வியலும் சடங்குமுறைகளும் பாரம்பரியத்தைப் பிரதிபலிப்பனவாகவே விளங்கின. அதனை மாற்றியமைக்கும் முயற்சியில் அரசாங்கம் விரும்பமுடனே உலக சமூகத்தவர்களுடன் இணைந்து வாழவேண்டிய சூழ்நிலை அண்மைக்காலங்களில் உரத்துக்காணப்பட்ட போது பழங்குடிகள் தமது பாரம்பரிய முறையில் இருந்து விடுபடுவ தற்குத் தயாராகுபவர்களாக இருக்கவில்லை. இருப்பினும் அவர்களை நாகரிகம் அடைந்த சமூகத்தவர்களுடன் இணைத்துச் செல்வதற்கு பல்வேறான செயற்றிட்டங்களைச் செயற்படுத்திவர முயற்சிகள் செய்யப்பட்டன. அவர்களை புதிய சமூகத்துக்கு மீட்டெடுப்பது என்பது சிரமமானதாக இருந்தது. ஆகையினால் உலகில் சில அரசுகள் பழங்குடியினரை இல்லாதொழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட பொலநறுவை, விஜயபுர, மன்னமபிட்டி போன்ற பகுதிகளில் இருக்கின்ற காடுகளில் சிலர் வாழ்ந்தார்கள். இந்நிலையில் அவர்கள் நாடு முழுவதும் நாடோடிகளாகத் திரிந்து வாழ்வாதாரத்தைத் தேடிவந்துள்ளனர். இதன் விளைவாகவே பிரிந்து ஆங்காங்கு வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. இதன்மூலம் ஒரு குழுவாக இல்லாமல் எல்லா இடங்களிலும் பிரிந்து செல்லவேண்டியதாகியது.

நாடு முழுவதும் பரந்துதிரிந்த நிலையில் வறண்ட பிரதேச மலைக்காட்டுப் பகுதிகளிலேயே வாழ்ந்தனர். 1950 காலப்பகுதிகளில் வறண்ட பிரதேசங்களில் குடியானவர் குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்தினர். பழங்குடியினர் உள்ளூர் மக்களால் விரட்டி அடிக்கப்பட்டனர். இதனால் பாதிக்கப்பட்ட நிலையில் ஒரு பகுதியினர் கிழக்கு மாகாணத்தில் காடுகளை வாழ்விடமாக மாற்றிக்கொண்டனர். இவ்வாறு வட மத்திய மாகாண பிரதேசங்களில் காலநிலைமாற்றம் காரணமாகவும் வாழ்வதற்கு ஏற்றதல்லாத வகையில் நோய்கள் ஏற்பட்டன. அரசியற் காரணிகளின் பாதிப்பான விளைவு காரணமாக பல இறப்புகளையும் சந்தித்தனர். ஆகையால் இலங்கைப் பழங்குடியினர் தங்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வாக சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களைச் சார்ந்த காடுகளைத் தெரிவு செய்து வாழ்வதற்குத் தொடங்கினர்.

வடமத்திய மாகாணத்தில் சந்தித்த சவால்களுக்கு தீர்வுகாணும் நோக்கில் தென்மேற்குப் பிரதேசங்களுக்குச் சென்ற பழங்குடியினர் எதிர்பாராத இன ரீதியான வன்செயல்களுக்கு முகங்கொடுத்தார்கள். அதாவது இந்தியாவைச் சேர்ந்தவர்களாக இந்தியாவில் இருந்து இலங்கைக்கு நாடோடிகளாக வந்தனர். இலங்கை தென்மேற்குப் பிரதேசத்தில் சிங்களப் பெரும்பான்மையினர் வரலாற்றுக் காலங்களில் இந்திய வன்மையுணர்வைக்கொண்டு விளங்கினர். அவர்களிடையே காணப்பட்ட இன பேதம் இந்தியாவில் தமிழர்கள் மட்டும்தான் வாழ்ந்துவருகின்றனர் என்ற கருத்தின் மூலம் அறியமுடிகிறது. ஆகையால் இவர்கள் மீது காணப்பட்ட வெறுப்புணர்வும் பிரச்சினையாக அமைந்தது. இதன் காரணமாக 1958 ஆம் ஆண்டு இனக்கலவரம் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இனரீதியான பிரச்சினைகளினால் நிரந்தரமற்ற வாழ்க்கையாக அவலநிலைக்கு உட்பட்டவர்களாக பழங்குடியினர் வாழ்ந்தனர். அதனைத் தொடர்ந்து பொலநறுவை, திருகோணமலை, மட்டக்களப்புப் பிரதேசக் காடுகளில் குடியமைத்துக்கொண்டனர்.

புளியடிப்பிட்டி, முள்ளிக்குளம், அம்பலத்தாறு, பனையறுப்பன்கேணி போன்ற காடுகளிலும் பின்னர் பெரிய விகாரை, சின்னவிகாரை, சங்கமித்த குளம், கைக்கேணி போன்ற இடங்களிலும் வாழ்ந்த நிலையில் அரச மற்றும் அரச சார்பற்று எந்தவித அக்கறையும் கொண்டிருக்கவில்லை. இந்நிலையில் அருட்திரு கொட்பிறீக் அடிகளார் இவர்களது வாழ்வில் மாற்றத்தினை ஏற்படுத்த முயன்றார். அக்கரைப்பற்றைச் சேர்ந்த அளிக்கம்பை எனுமிடத்தில் 1961இல் புனித சவேரியார் தேவாலயத்தினை நிறுவி கத்தோலிக்க மதத்தைத் தழுவ விரும்புவர்களுக்கு *ஞானஸ்தானம் செய்துவைத்தார். அதன் பின்னர்* இவர்களுக்கு நிரந்தரமான குடிசைகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து பொத்துவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர். எம் கனகரத்தினம் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வீடுகளைக் கட்டிக்கொடுத்தார். விவசாய நிலங்களும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இவ்வாறான மாற்றங்களை பழங்குடிமக்களுக்கு வழங்கினாலும் அவர்கள் பாரம்பரியமாகக் கடைபிடித்த வாழ்க்கை முறைகளையும் கைவிடவில்லை. பாரம்பரிய கடவுள்களை வணங்குவதுடன் நாடோடி வாழ்க்கையையும் பின்பற்றியவர்களாகக் காணப்பட்டனர். அத்துடன் விவசாயத் தொழிலாளர்களாகவும் வேட்டையாடுதல், பிச்சை எடுத்தல் போன்ற தொழில்களையும் செய்தும் வந்தனர். தொகுத்து நோக்கின் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சமூத்தினராக பழங்குடி மக்கள் காணப்படுகின்றனர். பல சவால்களையும் சிக்கல்களையும் எதிர்கொண்டு நாடோடி வாழ்கையை வாழ்ந்த அவர்கள் பல்வேறுபட்டவர்களாலும் ஒடுக்கப்பட்டு இருந்தபோதிலும் இவர்களும் மனிதர்களே ஆவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org